பரிசுத்தவாரச் சிறப்பிதழ்

# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

**நம் பத்திரிகை**

பரிசுத்தவாரத்தையிட்டு நம் பத்திரிகை அடுத்த 28 ஆம் தேதி சனிக்கிழமை வெளிவர மாட்டாது. வருகிற சித்திரைமாதம் 4 ஆம் தேதி சனிக்கிழமையே மறுபடி வெளிவரும்.

95-ம் புத். | 1970-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ந் திகதி புதன்கிழமை — பிரதிசதம் 15 | 11-ம் இல.

## சிலுவையிற் பலியாகி

# உலகினை இரட்சித்த வள்ளல்

நேசம் நிறைந்த பரமபிதா நீசமனிதரை நித்திய கேட்டினின்று இரட்சிக்கவெண்ணி நிந்தனை நிறைந்த உலகினில் நிசித வேடம்பூண்டு நிகரில்லாத வேதனைகளையும் பாடுகளையும், அவமானங்களையும் அனுபவித்துப் பலியாகி மானிடரை மீட்குமாறு தமது அருமைத்திருமகனை இவ்வுலகிற்கு அனுப்பினார்.

பரமசுதன் மனித அவதாரம் பூண்டு பாரினிற் பரம தரித்திரனாய்ப் பிறந்து வளர்ந்து இரட்சணிய அலுவலை இனிதே நிறைவேற்றற் பொருட்டு யோர்தான் நதிக்கரையில் ஸ்நாபக அருளப்பரால் தவத்தின் ஞானஸ்நானம் பெற்றுப் பாலைவனத்திற் கெழுந்தருளி இரவும் பகலும் இயம்பவொண்ணுக் கடுந்தவம் புரிந்து தமக்கினியரான தரித்திரர் பன்னிருவரைப் பரிவுடன் தெரிந்தெடுத்துக் கிராமங்கள் பட்டினங்கள் தோறும் சென்று பரலோக இராச்சியத்தின் நற்செய்திகளைப் பல உவமைகள் மூலம் பாரினிற் பகர்ந்து அமுதமனைய வாக்கியங்களை அள்ளிச் சொரிந்தார்.

தமது தெய்வீக வல்லமையாற் தயைகூர்ந்து பரம ஔடதம் கொடுக்கும் வைத்தியனாகக் காட்சியளித்துத் தீராத பாவநோயினாற் தேம்பித்திரியும் அபலைகளின் கண்ணீர் துடைத்துக் கதிபெறவழியில்லாத பாவிகளைத் தேடிப் பரதேசம் திரிந்து பலஸ்தீனா நாடெங்கும் பரவசமூட்டும் அற்புதங்கள் பலபுரிந்துவந்தார். மரித்தோர் உயிர் பெற்று மகிழ்வுடன் எழுந்திருக்கும் மகத்தான வல்லமையைக் கண்ட மக்கள் அவரது தெய்வீக வல்லமையையுணர்ந்து மிக்க களிகூர்ந்து இதயம் மகிழ்ந்து இறைவனை இன்பமுடன் அன்பு மலர் சொரிந்து வாழ்த்திப் புகழ்ந்துபோற்றி நின்றனர்.

யேசுபிரான் யெருசலேம் நகருக்கு எழுந்தருளும் போது மக்கள் திரள் திரளாகப் புடைசூழ்ந்து அவரை வாழ்த்திப் போற்றினர். எபிரேயச் சிறுவர் குழாம் ஒலிவ மரக்கிளைகளைக் கரந்தனில் ஏந்தித் "தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! ஆண்

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

ஆசிரியர் F. S. C. — வங்காலை

"என் பிதாவே! இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கூடுமானால் நீங்கட்டும்; ஆனால், என் மனதின்படியல்ல; உம்முடைய சித்தத்தின்படியாகட்டும்" — மத். 26 : 39.



"மரணமட்டும் என் ஆத்துமமானது துயரத்தால் நிறைத்திருக்கிறது" — மத். 26 : 38.

## இல்லறக் கத்தோலிக்கரின் குரல்

இந்திய நாட்டுக் கருதினாலும், பம்பாய் பிரதேச அதிமேற்றிராணியாருமாகிய கருதினால் கிருசியாஸ் அடிகள் இவ்வருட தபசுகாலத்துக்கென வரைந்திருக்கும் நிருபத்துக்கு "இல்லறக் கத்தோலிக்கரின் குரல்" என மகிடம் கொடுத்திருக்கிறார். இல்லறக் கத்தோலிக்கரின் குரல் உலகில் தெளிவாகத் தொனியாதிருக்கும்போது தேவனுடையவேலை அரைகுறையாகவே நடைபெறுகின்றது என்பது அறியக்கிடக்கின்றது என்றும், இல்லறக் கத்தோலிக்கர் இயக்கங்களில் தலைமைதாங்கி நடப்பியாது, நடப்பிக்கப்படுபவர்களாக மட்டும் இருப்பார்களாயின் திருச்சபை பலவீனப்பட்டிருப்பது வெளிப்படைஎன்றும் அவர்கூறி, இல்லறக்கத்தோலிக்கர்களை தேவனது உத்தானத்துக்குச் சாட்சிகளாக உலகில் விளங்க முன்வரவேண்டுமென்றும் கேட்டிருக்கிறார். திருச்சபையின்பலம் இல்லறக் கத்தோலிக்கர்களின் ஆன்மபலத்திலேயே தங்கிஉள்ளதென்று எடுத்துக் காட்டி, நாட்டின் சேவைக்கு கத்தோலிக்கர்கள் முன்னிலும் கூடிய வகையில் தம்மை அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் அந்நிருபத்தில் தூண்டியிருக்கிறார் கருதினால் கிருசியஸ்.

## தந்தைக்கு ஊ-தான்'ரின் பாராட்டு

இவ்வருடம் தைமாதம் 1-ம் திகதியன்று உலக சமாதான தினத்தன்று பாப்பரசர் வெளியிட்ட சமாதான விண்ணப்பத்துக்காக ஐக்கியநாடுகளின் பொதுக்காரியதரிசி ஊ, தான்ற் அவர்கள் தமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்திருக்கிறார். 1970-ம் ஆண்டு ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் நிறுவப்பட்டு 25வருடங்கள் ஆகின்றனவென்றும், இந்த யூபிலிவருடத்திலேயாகுதல் முன்னிலும்கூடிய சித்தியை ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் பெற தேசங்கள் பாப்பரசரின் முன்மாதிரியைப் பின்பற்றி அயராது உழைக்கவேண்டுமென்னும் தனது விருப்பத்தையும் தெரிவித்திருக்கிறார்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னுச்சிப் பெத்தாச்சியின் பரிசுத்த வாரம்

காவலூர்க் கவிஞர்
ஞா. ம. செல்வராசா

பூர்வகிறீஸ்தவர்களின் பக்தி விசுவாசத்தையும், வேதவைராக்கியத்தையும், திருச்சபையின் கட்டளைகளை வழுவில்லாமல் அனுசரிக்கும் ஒழுங்குகளையும், குருமாருக்கு அமைந்து நடக்கும் கீழ்ப்படிதலையும், "தான் ஒரு கிறீஸ்தவன்" என்று சொல்லும் ஆசையையும், தங்கள் தங்கள் ஆலயங்களிலே வருகின்ற திருவிழாக்களையும், சுத்தவாளர்களின் பெருநாட்களையும், ஆண்களும், பெண்களும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் உற்சாகத்தையும், பக்திச்சிறப்பையும், இந்தக்காலத்து மக்களின் கிறீஸ்தவ ஒழுக்கங்களையும், சமயவழிபாடுகளையும், ஆலயநிர்வாகங்களையும் ஒப்புநோக்கிச் சிந்திக்கும்போது உள்ளபடியே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசத்தைப் பரக்கக் காணலாம்.

பழங்கால மக்கள், தாங்கள் கிறீஸ்துவின் மைந்தர்களென்றும், கத்தோலிக்க மக்களென்றும் பெருமிதத்தோடு பிறசமயவாதிகளுக்குப் பகிரங்கமாகக் காட்டுவதற்குத் தத்தம் கழுத்தில், வரவணிக்கம், குருசு, உத்தரீயம், செபமாலை முதலிய திருப் பண்டங்களைத் தரித்துக் கொள்வார்கள். அதிலும், இவைகளைச் சட்டைக்குள் மறைத்துப் போடாமல், சட்டைக்கு வெளியே தங்க நகைகளை அணிவது போன்று அணிந்து கொள்வர். இன்று இவ்வழக்கம் நம்மத்தியிலிருக்கிறதா என்பதைச் சிந்தியுங்கள்.

நத்தால் பண்டிகையோ, வருடப்பிறப்போ, கோயில் திருநாட்களோ வந்துவிட்டால், எவ்விதமானவேலை வில்லட்டிகள் இருந்தபோதும் அவைகளொன்றையும் பொருட்படுத்தாமல் முதன்முதல் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணி, நல்லுடை தரித்து, திவ்வியநற்கருணை பெற்றுப் பூசை முடிந்ததும் தங்கள் தங்கள் கோபக்காரர்கள், பகையாளிகள், மனக்கறுப்புள்ளவர்கள் எங்கெங்குள்ளார்களென்று தேடி அறிந்து அவரவர் வீட்டுக்குச்சென்று இருகையும் குவித்துத் தோத்திரஞ் சொல்லி நெற்றியிலே பகையாளிகளின் கையால் சிலுவையடையாளம் வாங்கி அங்கேயே பலகாரம் வெற்றிலை சாப்பிட்டு மிகவும் மனச்சந்தோஷத்துடன் வீடு வந்து சேர்வர். இவ்வண்ணமே, மருதமடு, தலைவில்லு, பாலைதீவு முதலாம் யாத்திரைத் தலங்களுக்குச் செல்லும் யாத்திரீகர்களும் முதன் முதல் தங்களூர் கட்டளைக் குருவானரிடம் நல்ல பாவசங்கீர்த்தனம் பண்ணி, பகையாளர்களிடம் சென்று உறவாடிச் சமாதானப்படுத்தி அதன் பின்பே யாத்திரையை ஆரம்பிப்பார்கள். இக்காலத்து நத்தால் பண்டிகையின் நிலை யென்ன? யாத்திரை செல்லும் கோலங்களென்ன?

இன்னும் ஒவ்வொருவர் வீட்டிலும் வயோதிபர்கள் துவக்கம், சிறுவர்கள்வரை பிறந்தநாள் கொண்டாட்டம் கொண்டாடுவார்கள். இவர்களின் இக்கொண்டாட்டம் அவரவர்களின் பேர்சுமந்த சுத்தவாளர்களின் திருநாளாகவே யிருக்கும். இந்தக்கால மக்களைப்போல் "பேக்டேபாட்டி" 'Birth Day Party' என்ற ஒரு பாட்டியை ஏற்படுத்தி ஊர்முழுவதுக்கும் சொல்லி, அதிலே ஒருசிறு வருமானத்தைப்பெற்று சாராயப் போத்தலும் உடைத்துக் கோழிக்கறியும் சமைத்துப் பிறந்தநாளைக் கொண்டாடமாட்டார்கள். மிகவும் பத்திச்சிறப்போடும், கிறீஸ்தவமுறையோடும் இவர்களின் கொண்டாட்டம் இடம்பெறும். தங்களின் பிறந்தநாளுக்கு முந்திய நாள் முதன்முதல் நல்லபாவசங்கீர்த்தனம் பண்ணுவார்கள். அடுத்த நாள் புதியஉடுப்புகளும் அணிந்து பூசைகண்டு திவ்விய நற்கருணை பெறுவார்கள். பூசை முடிந்து வீட்டுக்கு வந்ததும் சிறுவர்கள் யாபேருக்கும் தங்கள் செபமாலையால் முகத்தைத் தடவி, நெற்றியில் சிலுவையிட்டு, முடிச்சை அவிழ்த்து ஒருசதம் இரண்டுசதம் கடலைகச்சான் வாங்கும்படி கொடுப்பார்கள். வீட்டுச் சமையலும் அன்று விசேஷமாக நடைபெறும். விசேஷமென்றால் வேறொன்றுமில்லை. வழமையான கறிவகைகளோடு ஒரு அப்பளப் பொரியல் கூடவிருக்கும். இவ்வளவுதான்; இந்தச் சிறப்போடு இவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டம் முடிவடையும்.

அந்தக்காலத்து மக்கள் வழியிலோ தெருவிலோ அல்லது வேற்றிடங்களிலோ ஒரு குருவானவரைக் கண்டுவிட்டால் எந்தவொரு கிழவி கிழவனும்; வாலிபர், கன்னியரும் உடனே கையிலிருக்கும் சாமான்களைக் கீழே வைத்துவிட்டு, இருகையும் குவித்து ஒற்றை முழங்கால் குத்தி "தோத்திரம் சுவாமி" யென்று பயபக்தியோடு சொல்லுவார்கள். சுவாமியாரும் அவர்கள் பக்கம் திரும்பி "ஆசீர்வாதம் பிள்ளாய்" என்று வெகு அன்போடு கூறுவார். இந்தக் கடமையை எவ்விதமானசேறு சகதிகளுள்ள இடங்களிலும் செய்து முடிப்பர். அவர்கள் இடத்தையோ அல்லது தங்கள் உடுப்பையோ கண்ணுங்கருத்தாய்ப் பார்ப்பதில்லை. குருபக்தியொன்றையே தங்கள் உள்ளத்தில் ஆணித்தரமாகக் கொண்டவர்கள். இந்தக் காட்சியை இக்காலத்தில் கனவிலும் காண்பது மிகமிக அரிதேயாகும்.

தபசுகாலம் வந்தால் பழங்காலக் கிறீஸ்தவர்கள் அனுசரித்த சுத்தபோசனத்தையும்; பிடித்தநோன்பையும், கையாண்டபக்தி முயற்சிகளையும், அறியும்போது, இன்று அவைகள் யாவும் நமக்கு ஒருகேலிக் கூத்தாகத் தோன்றினாலும் ஊன்றிக் கவனித்தால் எவ்வளவோ ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. நம்மைப் போன்று சந்ததி சந்ததியாகவந்த கிறீஸ்தவர்களோ, கல்வியறிவு பெற்றவர்களோ, ஞானநூல்களை வாசித்தவர்களோ, அன்றேல் நாடுநாடாகச் சென்று கிறீஸ்தவ சமுதாயங்களோடு பழகினவர்களோ அல்ல. புதிதாக ஞானத்தீட்சை பெற்ற புத்தம் புதிய கிறீஸ்தவர்கள். சைவமக்களும், சைவ அனுட்டானங்களும், தேர்திருவிழாக்களும், கேளிக்கைகளும், அங்கிரேட்டிகளும் நாளாந்தம் நடைபெறுஞ் சூழலிலுள்ளவர்கள். இந்த வைபவங்களை அயலிலிருந்து நித்தமும் கண்ணால் பார்ப்பவர்கள், மாந்தளவும் கல்வியறிவில்லாதவர்கள், பிறநாட்டு மக்களோடு பழகாதவர்கள். இப்பேர்ப்பட்ட வாழ்க்கையில் வாழ்ந்தவர்கள் தபசுகாலக் கடமைகளைச் சுமுத்திரையாக அனுசரித்து வந்தார்களென்றால், இவர்களின் நெஞ்சத்தில்பதிந்த ஆழ்ந்த பக்தியும், வேதவைராக்கியமும் எத்தகையதென்பதைக் கூறவும் வேண்டுமோ. பழங்கால மக்கள் எவ்வண்ணம் தபசுகாலத்தை அனுசரித்தார்களென்பதற்கு உதாரணமாகப் பொன்னுச்சிப் பெத்தாச்சியின் பரிசுத்தவார நிகழ்ச்சிகளைக் கீழே படியுங்கள்.

பொன்னுச்சிப் பெத்தாச்சி பத்தியில் முத்திப்பழுத்த பழங் கத்தோலிக்க மூதாட்டி. வேதக் கடமைகளை அனுசரிப்பதிலும், குருமாரின் சொற்படி நடப்பதிலும் மிகவும் ஒழுக்கமுள்ளவள். விவாகம் நடப்பதற்கு இரண்டொரு நாளைக்கு முந்திக் கெட்டித்தனமாய்க் கைக்கீறு அதாவது குருசடையாளம் போடுவதற்கு குடிதரிசியிற்கும் குருசப்பாவிடம் கற்றுக்கொண்டவள். எனினும், சிலுவைமந்திரம் துவக்கம் மற்றும் மந்திரங்களும், காரணிக்கங்கள், சின்னச்சிலுவைப்பாதை, தேவமாதாம் பிரார்த்தனை முதலாம் பிரதான செபங்கள் யாவும் பெத்தாச்சிக்குத் தண்ணீர்பட்ட வாய்ப்பாடம். இவவின் இந்தக் கெட்டித்தனத்திற்குப் பாடம் பழக்கிக் கொடுத்த அண்ணாவியார் வேறு யாருமில்லை. ஓய்விலிருக்கும் கூனல் உபதேசியாரேயாகும் இவ்வளவு படிப்புக்கும் பெத்தாச்சிக்கு ஏற்பட்ட அதிகச்செலவு ஐந்தாறு ஊர்ப் புகையிலையும், தன் வளவில் தட்டிய பத்துமுருங்கைக்காயும், ஒரு கோழிக்குஞ்சும் மாத்திரம். இவ்வளவோடு ஞானஉபதேசப் பாடவகுப்பின் ரியூஷன் பீஸ் முடிந்தது.

பெத்தாச்சி அம்மா சகல திருநாட்களிலும் பார்க்க, தபசு நாட்களை வெகுகரிசனையோடும், பத்திச் சிறப்போடும் அனுசரிக்கும் பழக்கமுள்ளவள். விபூதித் திருநாளைக்கு முந்தியநாளாகிய செவ்வாய்க்கிழமையன்றே பெத்தாச்சியின் தபசுநாள் ஆரம்பித்துவிடும். விற்பனைக்கும், வீட்டுப் பாவனைக்கும் மாப்பானைக்குள் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அத்தனை கோழி முட்டைகளையும் எடுத்து, தனது பேரப்பிள்ளைகளுக்கும், பீட்டப்பிள்ளைகளுக்கும் அவித்துப் பொரித்துத் தின்னும்படி பங்கிட்டுக் கொடுத்துவிடுவாள்.

அடுத்தநாள் புதன்கிழமை, பறக்குபோகும் காகம்தானும் ஒரு வெறுங் கோழி முட்டைக் கோதையும் கெரியாத்தனமாய் தன் வளவுக்குள் போடுவதையும் பார்க்கச் சகிக்கமாட்டாள். வீட்டில் கறக்கும் பசும்பாலையும் தபசுநாள் முடியும்வரை எவருக்கும் விற்பதற்கோ, அல்லது தன்வீட்டுப் பாவனைக்கு கொடுப்பதற்கோ ஒருபோதும் சம்மதியாள். கன்றுகள் குடிப்பதற்கே விட்டுவிடுவாள். எவ்வித மாமிசமும் மருந்துக்கும் எடுக்கமாட்டாள். அவ்வளவு கரிசனையோடும்; கட்டுப்பாட்டோடும் சுத்தபோசனத்தை அனுசரிப்பவள்.

தபசுகாலத்து சகல வெள்ளிக்கிழமைகளிலும் தவறாமல் நோன்பு பிடிப்பாள். நரைதிரண்டு, கண்குழி விழுந்து, முதுகுகூனி வயது எண்பதுக்கு மேற்பட்ட மூதாட்டியாயிருந்தும், திருச்சபையின் சட்டப்பிரகாரம் நோன்பு பிடிக்கும் கடமையிலிருந்து விலக்கப்பட்டவளாயிருந்தும் பண்டுதொட்டுத் தான்செய்துவந்த பழக்கத்தாலும், பத்திவிசுவாசத்தாலும் நோன்பு பிடிப்பதை இறக்கும்வரையும் தொடர்ந்து நடத்திக்கொண்டே வந்தாள்.

பெத்தாச்சி வழமையாகக் காலையில் சாப்பிடுவது இரண்டேயிரண்டு வெள்ளையப்பம் மாத்திரம். தபசுகால வெள்ளிக்கிழமைவந்தால், இந்த இரண்டு வெள்ளையப்பங்களுக்கும் பெத்தாச்சியின் பேரால் போயாவிடுமுறை. மத்தியானம், மகள் மாணிக்கத்திடம் சொல்லி ஒருமரக்கறிக் குழம்பும், சொதியும் வைத்துச் சோறு சாப்பிடுவாள். இடைநேரத்தில் பச்சைத் தண்ணீரும் கிடையாது. இரவுநேரம் ஒரு பனங்கட்டித் துண்டும் கடித்துக் கொண்டு ஒருசிரட்டை கோப்பித் தண்ணீர் மாத்திரம். இவ்வளவுமே பெத்தாச்சியின் நோன்பு டயற்.

பரிசுத்தவாரம் ஆரம்பித்துவிட்டால் பொன்னுச்சிக் கிழவியைக் கோவிலிலும், குருசடியிலும் மாத்திரம் காணலாம். குருத்தோலை ஞாயிற்றுக்கிழமைப்பூசைக்கு இரண்டாம் மணியடித்ததும், வெள்ளை முக்காட்டோடும், நீளச்செபமாலையோடும் கோயிலுக்குச்சென்று சற்பிரசாதக் கிறுதிக்குமுன்னால் குந்திவிடுவாள். இரண்டாம் மணியோடு கோவிலுக்குப் போவதற்கும், கிறுதிக்கு முன்னால் பேய் குந்துவதற்கும் காரணங்களில்லாமலில்லை. இரண்டு முக்கிய காரணங்களுண்டு. ஒன்று பெத்தாச்சிக்குக் கண் புகைச்சல், மற்றது வாயூறல்.

பூசைப்பலியின் ஒவ்வொரு பாகத்தையும், கூறுகுறிப்பாய் அவதானிப்பதற்கும், குருவானவரின் முகத்தை நன்குபார்ப்பதற்கும் பெத்தாச்சியின் கண்பார்வை வில்லங்கம் கொடுப்பதினாலேயே, கிறுதியின் முன்னிடத்தைத் தேடிப்பிடிப்பது. இதுவே முதல்காரணம். அடுத்தது, சனிக்கிழமை இரவு பன்னிரண்டுமணி துவக்கம், ஞாயிற்றுக்கிழமைகாலை, பூசைப்பலியில் சற்பிரசாதம் உட்கொள்ளும்வரை எவ்வித உணவுகளும் அருந்தாதது மாத்திரமல்ல, தனது வாயிலூறும் எச்சிலைத் தானும் விழுங்குவதும் சற்பிரசாதம் எடுக்கும் ஒழுங்குக்குத் தவறென நினைத்து, ஓயாது காறிக் காறித் துப்பிக்கொண்டிருப்பாள். கோயிலுக்குள்ளிருந்தும் நித்சமும் எழும்பி எழும்பித் துப்பிக்கொண்டிருப்பது தனக்கும், பிறருக்கும் இடைஞ்சலென்ற காரணத்தால் ஒரு சிரட்டையில் மண் கிள்ளிக் கொண்டு ஒருவருக்குந் தெரியாமல் கொய்யகத்துக்குள கொண்டு செல்வாள். இந்தத் துப்பல் சிரட்டையை கிறுதிக்கருகிலிருக்கும் சுவர் மூலையில் வைப்பதற்காகவுமே இவ்விடத்தை தேடிப்பிடிப்பது. இதுவே இரண்டாங்காரணமாகும். குருத்தோலை ஞாயிற்றுக்கிழமை பூசை முடிந்ததும் குருவானவர் மந்திரித்துக் கொடுத்த குருத்தோலையில் யாரையாவது பிடித்து குருசும்செய்து கொண்டு வீட்டுக்குச் செல்லுவாள். இன்றிருந்து அல்லேலுய்யாச் சனிக்கிழமைவரை பெத்தாச்சி ஒவ்வொருநாளும் நோன்பும், ஒறுத்தலும், செபமும், தவமுமாகவே இருப்பாள். இத்துடன் கிழவிக்கு வெற்றிலை இடித்துக் கொடுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும், உரல் உலக்கைக்கும், சுங்கானுக்கும், நெருப்புச்சட்டிக்கும் சனிக்கிழமைவரைக்கும் பூரணவிடுதலை. அப்பக்காறிக்குக் கைக்குமேல் நட்டம்.

பெரிய வியாழக்கிழமையைப் பற்றிச் சொல்லத்தேவையில்லை. சுருக்கமாகச் சொன்னால் சாப்பாடுதுவக்கம், படுக்கைவரைக்கும் அன்று கோவிலில்தான் இருக்கும். சற்பிரசாதநாதரைச் சந்திக்கவரும் அத்தனை கூட்டக்காரர்களின் ஆராதனைகளிலும் பங்குபற்றுவாள்.


அடுத்தநாள் பெரியவெள்ளிக்கிழமை இதுவே பெத்தாச்சியின் கடுந்தபசுத்தினம். சுத்தபோசனம், நோன்பு, பூசைப்பலி, செபம் இவைகளோடு மாத்திரம் தபசுநாளைச் செலவழிப்பது போதாதென்றும், கிறீஸ்துநாதர் பட்ட திருப்பாடுகளில் தானும் ஒருசிறு பங்கு அனுபவிக்க வேண்டுமென்னும் ஆசையுள்ளவள். இதனால் தனது பேரப் பெடியன்களுக்குக் கடலைகச்சான் வாங்குவதற்குக் காசுகொடுத்து பனைமட்டையில் ஒருசிலுவையும், காரைக்கொப்பால் முள்முடியும் செய்துவைத்துக் கொண்டனள். பெரிய வெள்ளிக்கிழமை காலை வழமையான வெள்ளைச்சேலையையும் உடுத்திக்கொண்டு, இந்தமட்டைக் குருசையும் முள்முடியையும் எடுத்துத் தோளிலும், சிரசிலும் அணிந்து கொண்டு கோவிலுக்குப் புறப்பட்டாள். இக்கோலத்துடன் இந்தப்பழசு தெருவீதியில் சென்றால், இதனைப்பார்த்த இந்தக்காலத்து இடசுகள் சும்மா இருப்பார்களா? கேலியும் கிண்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண தண்டனை மண்டை ஓட்டு மலையில்

அன்று நாளோ வெள்ளிக் கிழமை. அதுவும் பெரிய வெள்ளி. நேரமோ நண்பகலைத் தாண்டி விட்டது. இடமோ மண்டை ஓடுகள் குவிந்த மலை. இந்த மலையில்தான் உலகப் பிரசித்தி பெற்ற இந்த மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்த மரண தண்டனைக்குரிய குற்றவாளி வேறு யாருமல்ல; கடவுளின் மகன் யேசுக் கிறீஸ்து.





பகிரங்கமாக நடத்தப்படும் இம்மரண தண்டனையைப் பார்க்கப் பெருந்திரளான மக்கள் கூட்டம் முண்டியடித்துக் கொண்டு சென்றனர். அதில் வேடிக்கை பார்க்கவந்தோர் பலர். வேதனைப்படுவோர் சிலர். அதிகாரஞ் செலுத்துவோர் பலர்; அன்புடன் நோக்குவோர் சிலர். பரிகாசம் பண்ணுவோர் பலர்; பரிவுடன் பார்த்திருப்போர் சிலர். கட்டுப்படுத்த முடியாத சனக்கூட்டத்தை அடக்கி ஒடுக்குவோர் பலர்; அழுது புலம்புவோர் சிலர்.

வந்திருந்த சனக்கூட்டத்தினிடையே பத்துமாதம் சுமந்து, பாலூட்டித் தாலாட்டி வளர்த்த அன்னை மரியம்மாள் அடக்கமுடியாத வேதனையுடன் சிலுவை அடியிலே நிற்கிறாள். கானாவூரிலே தன் இனத்தவரின் கல்யாண வீட்டில் இரசம் குறைந்தபோது தன் வார்த்தையைத் தட்டாது முதல் புதுமை புரிந்த, ஆசீர் அளித்த கைகளிலே இருப்பாணிகள் துளைத்துள்ள காட்சியைக்கண்டு கலங்கி நின்றாள். உலகத்தோரால் வேசியென்ற இழிச்சொல்லுக்கும், பழிச்சொல்லுக்கும் ஆளாகி, ஈற்றில் பாவச்சேற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கும், புண்ணிய நற்சீவியத்தைத் தொடங்குவதற்கும் காரணராயிருந்த கடவுளுக்கா இந்தக் கதி என்று ஏக்கமே உருவாகி நின்றாள் மரியமதலேனாள்.

யேசுவால் மிகவும் பிரியமாக நேசிக்கப்பட்ட அருளப்பரோ நல்லுரைவழங்கிய நல்லவருக்கு, சொல்லருள்புரிந்த செம்மலுக்கு, மனுக்குலத்தை ஈடேற்றவந்த மனுமகனுக்குக் கடைசியில் இந்த அவமானச் சாவுதான் பரிசா? கடைசியில் ஏதாகிலும் அருள்மொழி கூறுவாரா? என்ற வண்ணம் ஏங்கினின்றார். சனக்கூட்டத்தின் நெரிசலையும், வீரர்களின் அடக்கு முறையையும் பொருட்படுத்தாது, பெண்ணாக இருந்தும் துணிவைத் துணைக்கு அழைத்து முன்னேறிக் கறைபடிந்த, நனைந்த யேசுவின் முகத்தைத் துடைத்த பெண் வெரோணிக்கம்மாளும், திருமுகம் துடைத்த திருத்துகிலோடு நின்றாள். இவர்களோடு இன்னும் பல ஜெருசலேம் பட்டணத்தின் புண்ணிய ஸ்திரீகளும் அழுது புலம்பிக்கொண்டு நின்றார்கள்.

கடைசி நேரத்திலும் அன்னாசும், கைப்பாசும் யேசுவை நிந்தித்துக் கொண்டே இருந்தார்கள். இவர்களோடு இடதுபக்கக் கள்வனும் சேர்ந்து கொண்டான். போர்வீரர்கள் சும்மாயிருந்தார்களா? இல்லை. இவர்கள் தமது வழமையான கும்மாளத்தோடு யேசுவின் இரத்தக் கறைபடிந்த அங்கிகளுக்குத் திருவுளச் சீட்டுப் போட்டார்கள். இவ்வளவும் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் கருணையுள்ளம் படைத்த கடவுளின் மகன் யேசு கடைசிப்பொன்மொழிகளாக ஏழு வாக்கியங்களை உதிர்த்தார். அவ்வேழு வாக்கியங்களிலும் முதன்மையானது தம்மை அறியாது வாதிக்கும் மக்களுக்காக மன்னிப்புக் கோரித் தமது பிதாவை வேண்டியதேயாகும்.

மலைமேல் மரணமண்டனை நிறைவேறிக் கொண்டிருக்கும் வேளையில் நாடெங்கும் இருள் உண்டாகிறது. இந்த அநியாயக்காட்சியைக் காணச் சகியாமல் சூரியன் ஒளியைக் குறைத்தான். நீலவானம் கருமுகிற் கூட்டங்களால் கறுத்தன. பசுமையாக வீசிய காற்று பயங்கரமாக மாறியது. பூமியே அதிரும்வண்ணம் வானத்தில் இடிமுழக்கங்கள்; கண்கள் கூசும்வண்ணம் பயங்கர மின்னல்; என்றுமே இல்லாத பயங்கரச் சூழ்நிலை; என்ன நடக்குமோ என்ற ஏக்கநிலை. இவையாவும் இறைமகன் இறக்கப்போகிறார்; மதியிழந்த மனுக்குலமே இதனை நீயுமோ வேடிக்கை பார்க்கிறாய்? உன்னால் அல்லவா அவர் அவமானமாய்ச் சிலுவையில் தொங்குகிறார். நீயல்லவா அவருக்கு மரணத்தீர்வை அளித்தாய்? இப்போதாவது புரிந்து கொள்; அவரைத் தெரிந்து கொள்; உன்னை அறிந்து கொள் என்று கூறுவதுபோல் நடைபெறுகின்றன.

கடவுளின் மகன் தமது கடைசி மூச்சை — குரலை உயர்த்தி, “என் கடவுளே, என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர் என்றும், முடிவில் எல்லாம் நிறைவேறிற்று என்றும் தமது உயிரை விட்டார். மண்டைஓட்டு மலையில் மரண தண்டனை நிறைவேறிற்று. கடவுளின் குமாரனும் மரித்தார். மரித்தவர்களை உயிர்ப்பித்த மனுமகனும் மண்ணிலே மாண்டார். கடவுளின் மகனைக் கொலைசெய்த பெருமையோடு மண்டையோட்டு மலையை விட்டு எல்லோரும் நீங்கினர். சிலர் இவர் உண்மையிலே தேவசுதன் தான் என்ற தீர்மானத்தோடு சென்றனர். பலர் அப்பொழுது நடைபெற்ற சம்பவங்களை மனதிற்கொண்டு சென்றனர்.

நாம் இப்பொழுது என்ன நிலையில் உள்ளோம். ஒவ்வொருவரும் எமது உள்ளத்தைத் தொட்டுக் கேட்போம். தட்டிக் கேட்போம். அன்று அவர்கள் இவர் உண்மையான தேவசுதன்தான் என்று ஏற்றுக் கொண்டார்களே. ஆனால் நாங்கள் இன்றுவது அவரை எம் இதயத்தில் ஏற்றுக் கொள்கிறோமா? அவர் மணிமொழிகளை எமது அணிபொழிகளாகக் கொள்கிறோமா? இவற்றிற்கு இந்நாளிலேயே விடை காணுவோமாக.

# தேவதாயாரின் ஏழு வியாகுலச் சிந்தனைகள்

அரிய சகோதரமே! எங்களுக்காக மன்றாடுகிற தாயாரின் வியாகுலங்களை இவ்வேளை நம் நினைவுக்கெடுத்து அவைகளைக் கருத்தாய்ச் சிந்தித்துப் பயன் பெறுவோமாக.

**1-ம் வியாகுலம்**

**விருத்தசேதனம்**

வியாகுலத்தாயாரே, நீர் பெற்றெடுத்த உமது நேச குமாரன் குழந்தை யேசுநாதருக்கு விருத்தசேதனச் சடங்கை நிறைவேற்றிய போது பாலகயேசு பட்ட துடிதுடிப்பையும் வீரிட்டுக்கதறிய அழுகையையும் மெல்லிய மேனியால் சொரிந்த இரத்தத்தையும் கண்டு மகாவேதனைக்குள்ளானீரே. அந்த வேதனையால் நீரடைந்த சொல்லொணு வியாகுலத்தைக் குறித்து.

தாயே எங்கட்கு வருத்தம், துன்பம், மனக்கலக்கம் வரத் தேவரீர் உத்தரவு கொடுக்கிற சமயத்திலே அவைகளை நல்ல மனதோடு பொறுத்துக்கொள்ளத் தயைபுரிய உம்மை மன்றாடுகிறோம்.



**2-ம் வியாகுலம்**

**கர்த்தரின் காணிக்கை**

வியாகுலத்தாயாரே, உமது நேசகுமாரனாகிய கர்த்தரைக் கோவிலில் காணிக்கையாகப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த போது புனித சிமையோன் என்கிற தீர்க்கதரிசி; இவர் அநேகருக்குக் கேடாகவும், அநேகருக்கு இரட்சணியமாகவும் இருப்பாரென்றும் அவருக்கு வரப்போகும் நிந்தை அவமானங்களால் உமது திரு இருதயம் வியாகுல வாளால் குத்தப்படுமென்று சொன்னதைக் கேட்டபோது நீர் திடுக்கிட்டுக்கொண்டீரே. அந்தத் திடுக்காட்டத்தால் உண்டான மனோவேதனையான பரிதாப வியாகுலத்தைக் குறித்து.

தாயே, எங்கள் பாவங்கட்கு ஆக்கினையாகத் தேவன் வரவிடும் பஞ்சம், படை, கொள்ளை, பசிப்பிணி, சூறுவளி போன்ற இடையூறுகளில் நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளத் தயைபுரிய உம்மை மன்றாடுகிறோம்.

**3-ம் வியாகுலம்**

**கர்த்தரைக் காணாது தேடியது**

வியாகுலத்தாயாரே, உமது திருக்குமாரனாகிய கர்த்தருக்குப் 12 வயது நடக்கிறபோது எருசலேம் நகரத் தேவாலயப் பண்டிகைக்குப் போனதில் 3 நாள் அவரைக் காணது தவித்துச் சிமையோனின் தீர்க்கதரிசனத்தையும் நினைந்து துக்க அழுகையோடு அந்த 3 நாளும் அன்னபானமின்றி அங்கும் இங்கும் கால்தேயத் தேடி அலைந்ததில் களைகொண்டீரே, அதனால் நீர் அடைந்த களைப்பும் பட்ட கஸ்தியும் மனோ வேதனையுமான வியாகுலத்தைக் குறித்து,

தாயே நாங்கள் பிறர்சிநேகமற்றவர்களாய் ஏழைகட்கிரங்காது, பணவாஞ்சை கொண்டு கற்பனைகளை மீறி ஆசாபாச இச்சைகட்கு ஆளாகிப் புரிந்துகொண்ட பாவங்களால் இழந்துபோன தேவ இஷ்டப்பிரசாதத்தைப் பச்சாத்தாபத்தால் தேடி அடையத் தயைபுரிய உம்மை மன்றாடுகிறோம்.

**4-ம் வியாகுலம்**

**மகனார்**

**சிலுவை சுமந்து போனது**

வியாகுலத்தாயாரே, பிலாத்துத் துரையால் உமது நேச குமாரனுக்கு அநியாயமாய் விதிக்கப்பட்ட சாவின் எத்தனமாகிய எங்கள் பாவச் சிலுவையை உமது திருக்குமாரன் தமது தோளில் எவ்வித முறுமுறுப்புமின்றிக் கொலைக்களத்துக்குச் சுமந்து தள்ளாடித் தள்ளாடிச் செல்லுகையில் பேச்சும் அயர்ந்து மேல் மூச்சும் எழுந்தவேளை, நீர் பதறிப்பதறி அவருக்கு எதிராகப்போய்ச் சந்தித்தபோது துக்கத்தினால் இருவரும் பேச நாவெழமாட்டாமல் மனதிலே சோகம்நிறைந்து அழுது கொண்டீர்களே,

இந்த இருவரினதும் சந்திப்பில் மகனின் ஆறுதலான ஒரு வார்த்தையாவது சொல்லக் கேளாது நேர்ந்த இந்தக் கண்ணாருவியான துயரவேளையில் நீர் அழுதுவடித்த துயரக் கண்ணீரைக் குறித்து,

தாயே, உலக அரசுகளுக்குள்ளே உண்மைச் சமாதானமும், சண்டை சச்சரவுகள் இல்லாதொழியவும் பிரசைகளை நல்வழிப்படுத்தவும் ஆட்சிப்பொறுப்பாளர்களை வழி நடத்தவும் எங்கட்கு நேரிடும் சிலுவைகளையும் பேறுள்ள தாக்கிக்கொள்ளவும் தயைபுரிய உம்மை மன்றாடுகிறோம்.

**5-ம் வியாகுலம்**

**மகனார்**

**சிலுவையில் உயிர்விட்டது**

வியாகுலத்தாயே, எங்கள் இரட்சணியத்தின் தேவன் கொலைக்களமாகிய கல்வாரி உச்சியை அடைந்ததும், சற்றுவது இளைப்பாற இடங்கொடாது பாதகர் வஸ்திராபரணங்களை உரிந்து மானிபவீனமாய் ஈவு இரக்கமின்றித் துடிதுடிக்கப் பதைபதைக்கக் கை கால்களில் ஆணிகளைப் பொருத்திச் சிலுவையோடு குலுங்க உயர்த்தி நாட்டித் தொங்கவிட்டபோது 3 மணித்தியாலமாய் விரிந்த காயங்களால் சொரிந்த இரத்தமும் ஆருட்டமும் அனுக்கமும்

[மறுபக்கம் பார்க்க]

ஆசிரியர்
ஆ. மிக்கேல் குலாஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஓரங்க நாடகம்

# சீமோன் கண்ட சிலுவைப்பலி

ஆசிரியர்:
வீ. எஸ். பிள்ளை,
நாக்கவி.

(சீமோனின் இல்லத்தில் சீமோனும் அவன் மனைவி மேரியும்).

### அங்கம் 1.



மேரி :—அத்தான் ! வாருங்கள் ! ஏன் இவ்வளவு தாமதம் ?

சீமோன் :— அப்பாடா ! அதையேன் கேட்கின்ருய் ? பரிதாபத்திலும் பரிதாபம்:

மே. : — ஏன் அத்தான் ? ஏதும் விபத்துக்கள் நேர்ந்துவிட்டதோ ?

சீ, ; — அப்படி யொன்றும் ஆபத்தில்லை மேரி. நான் வேலைக்குப்போய்த் திரும்பும் வழியில் கல்வாரிக்குச் செல்லும் பாதையால் வந்தேன். தெருவைக் கடந்து என்னுல் போகமுடியவில்லை. அவ்வளவு சனக்கூட்டம்.

மே. : — ஏதாவது கலகம் ஏற்பட்டதோ ?

சீ. ;—இல்லையில்லை. யாரோ ஒரு கைதியைச் சிலுவையிலறையக் கொண்டு சென்ருர்கள். அக்கைதிவடக்கேயிருந்து வந்தவராம், தன்னை இராசாவாக்கிக் கொள்ள முயன்ருராம், அவர் தீர்க்கதரிசியென்றுகூடச் சிலர் பேசிக்கொண்டார்கள்.

மே. :—ஓகோ ! வேதபாரகர் முன்னே எழுதி வைத்த பிரகாரம் மண்ணுலகை மீட்க மனுவுருவாய் வந்த உலக இரட்சகரோ ?

சீ. : — அவர்மேல் பக்தி பூண்டவர்கள் அப்படித்தான் பேசிக்கொண்டார்கள். மக்களைப் பாவத்தில் நின்று இரட்சிக்க வந்தவராம், பன்னிரண்டு சீடர்களைத் தெரிந்து கொண்டு அவர்களுடன் ஊரூராகச் சென்று வேதோபதேசஞ் செய்தவராம். எத்தனையோ அற்புதங்களைப் புரிந்தாராம். இறுதியில் பாவிகளுக்க்காகப் பாடுபடத் துணிந்து, ஜெத்சேமெனியென்னும் பூங்காவில் ஊண் உறக்கமின்றி இராப்பகலாகத் தியானத்திலீடுபட்டிருந்தாராம். அவர்மேல் பொருமை கொண்ட யூதர்கள் அவரை இரவோடிரவாகக் கைதுசெய்து குற்றவாளியாக அரசனிடம் கொண்டு சென்றனராம்.

மே. : — நல்லவர்கட்குக் காலமில்லை யென்பது உண்மைதான்.

சீ. : — அதையேன் சொல்கிருய் ? இச்செய்தியை அறிந்த அவரது தாயார் கன்னி மரியம்மாளும், மற்றும் பக்தியுள்ள பெண்மணிகளும் அழுதழுது அவர் பின்னே சென்ருர்களாம்.

மே, : — உம். அந்த அரசனுக்குக்கூட அவர்மேல் இரக்கம் வரவில்லையா ?

சீ. : — அவரது களங்கமற்ற வதனத்தைப் பார்த்து அரசனுக்கு இரக்கம் வந்ததாம். அவரது மனைவிகூட அவரை விடுதலைசெய்யும்படி வேண்டினளாம். ஆனுல் அந்தக் கொடிய யூதர் விடவேண்டுமே. இல்லாத பொல்லாத குற்றங்களையெல்லாம் சாட்டி அவ்ரைக் கொல்ல வேண்டுமென்று பிடிவாதமாய் நின்றனராம்.

மே. ! — அப்பால்......

சீ. : — அப்பாலென்ன ? அவரைச் சிலுவையிலறைந்து கொல்லும்படி தீர்ப்பளித்துவிட்டானும் அந்த அரசன்.

மே. : — ஐயோ பாவம்.

சீ. : — அரசன் தீர்ப்பைக் கேட்டதும் அந்தப் பாதக யூதர் அடைந்த மகிழ்ச்சிக்கோ எல்லையில்லையாம். உடனே அந்த யூதர்கள் அவர்மேல் காறியுமிழ்ந்து துப்பிப் பரிகாசம் செய்தனராம். அணிந்திருந்த வஸ்திரத்தைக் களைந்து ஒரு முற்றவெளிக்கு அவரை அழைத்துச் சென்று கற்றூணில் கட்டினராம். தம் பலங்கொண்ட மட்டும் ஓங்கி அடித்தனராம். அப்பொழுது அப்பெண்மணிகள் அழுத காட்சியைப் பார்க்க வேண்டுமே.

மே. : — அவ்வளவோடாயினும் அந்த மகானை விடவில்லையா ?

சீ. : — அதையேன் கேட்கிருய் ? உடைந்த நாற்காலியொன்றில் அவரை இருப்பாட்டினராம். முள்முடியொன்றைத் தலையில் வைத்துத் தடியாலடித்து இறக்கினராம். மூங்கில் தடியைச் செங்கோலாகக் கொடுத்து யூதர்க்கு இராசாவே வாழ்கவென்று நையாண்டி செய்தனராம். முகத்தின் வழியே இரத்தம் ஆருகப்பெருகி வழிந்த காட்சியைக் கண்டு கண்ணீர் வடியாதவர்கள் யார் ?

மே. : — இத்தனைக்கும் அந்தப் பெரியார் எதுவுமே பேசவில்லையா ?

சீ. ! — ஒன்றுமே பேசவில்லை: எல்லாவற்றையும் பொறுமையோடு சகித்துக் கொண்ட அந்தப் புண்ணியாத்துமா, ஆகாயத்தை அண்ணூர்ந்து பார்த்து, பிதாவே ! இவர்கள் அறியாமல் செய்கிருர்கள். இவர்கட்கு மன்னிப்பருளுமென்றே அடிக்கடி வேண்டிக்கொண்டாராம்:

மே. : — அப்படி யென்ருல் அவர் சாதாரண மனிதனல்ல, ஒரு மகாத்துமாவாய்த் தானிருக்கவேண்டும்.

சீ. : — சந்தேக மென்ன ? மேரி ! இன்னுங்கேள் ! அவரை அடியடியென்று அடித்து வாதித்த பின் பெரியதோர் பாரச்சிலுவையைக் கொண்டு வந்து அவர் தோளில் சுமத்தினுர்கள்; மத்தியான வெயிலிலே கரடு முரடான கற்பாதை வழியாகக் கல்வாரி மலையை நோக்கி அதைச் சுமந்து செல்லச் சொன்னுர்கள். படாத பாடுபட்டுச் சுமந்துசென்ருர் அந்தப்பாரச் சிலுவையை. அந்த அவஸ்தையைக் கண்டு அழாதவர்கள் யார் ?

மே. ! — ஐயோ பாவம். அந்தத் துர்த்தர்களுக்கு அழிவு காலம்வந்துவிட்டதுபோலும்.

சீ. : — அக்கிரமம் மேரி அக்கிரமம். அந்தப் பரமாத்மா சிலுவையைச் சுமக்க முடியாமல் மூன்றுமுறை முகங் குப்புற விழுந்தார். அப்பொழுதும் அந்தக்கொடிய யூதர்கள் ஈட்டியால் குத்தியும், கசையினுல் அடித்தும் எழும்பும்படி ஆக்கினைசெய்தார்கள். மெதுவாக எழுந்தார் அந்த மகாத்மா. அவரால் நிற்கக்கூட முடியவில்லை. அச்சமயம் அக்கும்பலோடு கும்பலாக நின்ற என்னை அச்சிலுவையின் மறுபக்கத்தைத் தூக்கிவரும்படி கட்டளையிட்டான் பட்டாளத் தலைவன்.

மே. :— என்ன ! தங்களையா தூக்கச் சொன்னுன் ?

சீ. : — ஆம். என்னைத்தான். பயந்து சிலுவையின் மறுபுறத்தைத் தூக்கினேன்.

மே. : — மிகவும் பாரமாய் இருந்திருக்குமே.

சீ. : — சுமக்கமுடியாத பாரந்தான். சிலுவையைத் தூக்கி உதவிசெய்த என்னை அந்தப் பெரியார் திரும்பிப் பார்த்தார். அத்தகைய அருள் நிறைந்த கண்களையோ, இரக்கம் நிறைந்த பார்வையையோ இதுவரை நான் கண்டதேயில்லை. இருவரும் முக்கி முக்கிச் சிலுவையைச் சுமந்து கொண்டு தள்ளாடித் தள்ளாடிக் கல்வாரிமலையை அடைந்தோம். அவ்வளவோடு விட்டார்களா ? அந்தச் சிலுவையை இறக்கச் சொன்னுர்கள், அதிலே அந்தமகானைப் படுக்க வைத்துக் கைகளையும் கால்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

"வேலுண்டு வினைதீர்க்க" என்ற மெட்டு

திடங்கொண்டு கரங்கூப்பி அறங்கொன்ற
பவம் வென்ருல் அலகையின் பயமேது
அன்னைமரி திருமகனை (திடங்கொ )

அன்புண்டு அறமுண்டு அழியாத அகமுண்டு
அமுதான உனையுண்டு அருள்வாழ்வில் நிலைகொள்ள
(திடங்கொ )

கனியுண்டு கதிகெட்டு கடின வேதனைப்பட்டு
நிலைகெட்டு முறைகெட்டு நித்திய நெறிகெட்டு
துயருற்ற வழிவந்தோர் அழியாக்கதி சேர்க்க
மானிட உருக்கொண்ட மாபரன் யேசுவை
(திடங்கொ )

— வி. ஜெகநாதன்

# தேவதாயாரின் ஏழு வியாகுலச் ....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நடுக்கமும் இரத்த வேர்வையும் இடுப்பு வேதனையும் பெருமூச்சும் தாகமும் அதிகரிக்க, வேதனை தாங்கமாட்டாது மகா அபயசத்தமாய்க் கூப்பிட்டுப் பிதாவே, உமது கரங்களில் என் ஆத்துமத்தைக் கையளிக்கிறேன் என்று தலைகுனிந்து உயிர்விட்டதையும் நீர் கண்டு துடியாய்த் துடித்து மனம் பதறி அறிவு அயர்ந்து நாவரண்டு மனித வாக்குக் கெட்டாத துயரத்துக்குள்ளானீரே,

அந்த மனோவாக்குக் கெட்டாத பரிதாபநிலையில் மீண்டும் மீண்டும் சிலுவையில் மாண்டு மடிந்து தொங்கும் மகனுரைக் காணக் காண விம்மிவிம்மி அழுது வடித்த வியாகுலக் கண்ணீரைப் பார்த்து,

தாயே, நீர்சிந்தின கண்ணீராலும் உமது திருக்குமாரன் சொரிந்த திரு விரத்தத்தாலும் திருச்சபை பவிருத்திபெறவும், பாப்பானவர் கருத்துகள் நிறைவேறவும் பிரிந்த சகோதரர் மற்றும் சபையினர் ஒன்றுசேரவும், மேற்றிராணிமார், குருக்கள், கன்னியர்கள், சந்நியாசிகள், ஆசிரியர்கள் தம்கடமையில் தவருது பணிபுரியவும் உம்மை மன்ருடுகிருேம்.

### 6-ம் வியாகுலம்
### செத்த மகனுரைச் சிலுவையால் இறக்கிப் பெற்ற தாயின் மடியில் வளர்த்தியது

வியாகுலத்தாயாரே, செத்திறந்த மகனுரைச் சிலுவையால் இறக்கிப் பெற்ற உமது மடியில்வைத்தபோது ஐயோ, மகனே உம்மைப் பெற்றெடுத்தநாள் துவங்கி மற்றவர்கள் கைக்கொடாது நானே ஏந்தி அணைத்து வளர்த்து வந்திருந்தேனே. இப்போ இந்த ஈன யூதர் கையாலே மாண்டுமடிய உமக்கு மனம் வந்ததா ?

நீர் சற்றுமுன் சிலுவையிலே 3 மணித்தியாலமாய்த் துடிதுடித்துப் பட்ட தன்மானியையும் வடிந்த இரத்தத்தையும் கண்ணுரக்கண்ட நான் எவ்விதமாய் மன ஆறுதல் அடைவேன்.

இந்த மரணவேளையிலாகிலும் ஒரு தயவின் வார்த்தையாவது சொல்லக் கேளாத படுபாவியுமானேனே. இந்தக் கபாலமலையிலே அத்துவான இடத்திலே இப்படி எனக்கு வரவிருந்ததோ. இவ்வழியாய்ப் போகிற சனங்களே சற்று நில்லுங்கள்; என்னைப் போன்ற தாயை யாராவது கண்டீர்களோ என்ற கரைகாணுத உமது வியாகுலத்தின் தாழ்வை நாங்கள் கொஞ்சமாவது சிந்தித்துத் திருந்தி நடக்கவும், அவதி மரணமில்லாது நல்ல மரணப்பேறு அடையவும் எங்கள் மேல் இரங்கியருளும்.

மடியில் வளர்த்தப்பட்ட மகனுரைப் பார்த்துப்பார்த்து ஏங்கிஏங்கிச் சொரிந்துவடித்த பிரளயக் கண்ணீரைப் பார்த்து,

தாயே, உம்முடைய வியாகுலங்களையும் மகனுரின் பாடுகளையும் நாங்கள் எந்நேரமும் சிந்தித்து அவதி மரணமில்லாது நல்ல மரணப்பேறு அடையவும், மரித்தவிசுவாசிகள் சமாதானத்தில் இளைப்பாறவும் தயைபுரிய உம்மை மன்ருடுகிருேம்;

### 7-ம் வியாகுலம்
### மகனின் அடக்கம்

வியாகுலத்தாயே, மடியில் வளர்த்தப்பட்ட மகனுரை மண்ணுக்குள் அடக்கம்செய்ய ஆயத்தமானதால், மற்றும் அபிமானிகளுடன் நீரும்சென்றபோது மகனின் தேகத்தை ஒரு துணியால் சுற்றி மூடி மண்ணுக்குள் மறைத்ததைக் கண்டு இந்தக் கண்ணருவியைச் சகிக்கமாட்டாது நெஞ்சடைத்த துயரத்தோடு தனிமையாயிருந்து, மாட்டுத் தொழுவத்தில் வருத்த நோவுகளில்லாது பெற்றதையும், ஏரோதரசன் உம்மைக் கொல்லத் திட்டமிட்டதை அறிந்து அஞ்சி எகிப்துதேசம் கொண்டு ஓடிப் போனதையும், கானுவூர்க் கலியாணத்தின் போது என் வேண்டுகோளுக்கிரங்கியதையும், ஐந்தப்பத்தால் ஐயாயிரம்பேர் ஆறுதல் அடைந்ததையும், கடைசியாய் அநியாய யூதரால் மானிபவீனமாய்க் கழுமரத்தில் ஏற்றி ஈனமாய் மாண்டதையும் தமது தனிமையையும் ரூபிகரித்து இப்படியெல்லாம் இந்தக் கபாலமலையில் எனக்கு வரவிருந்ததோ என்று மகனின் சீவியத்தையும் மகன் பட்ட தன்மானியையும் நினைந்து நினைந்து அழுது சொரிந்து வடித்த ஆருத்துயரக் கண்ணீரைப் பார்த்து,

கடைசியாய் எங்கள் அன்புள்ள தாயாரே, நாங்கள் இவ்வுலகத்திலே சகல விக்கினங்கள் நிவாரணமாகிப் பரலோகத்திலே உம்மோடே உம்முடைய திருக்குமாரனின் மோக்ஷமுகதரிசனை பெற்றுக் களிகூர்ந்திருக்க ஒத்தாசை செய்தருளும், ஆமென்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமை புதுமை என்று...

ஒருவருடம் கபிரியேல் அதிதூதர் தமக்கு மங்களவார்த்தை கூறிய திருநாளன்று தேவதாயார் புனித ஜெர்த்துருத் அம்மாளுக்கு அளித்த ஒரு காட்சியிலே, தம்முடைய திருப்பத்தாவான சூசையப்பரை அதிகம் நேசித்து அவருடைய மன்றாட்டின் வல்லமையில் நம்பிக்கை வைக்கும்படியாக அவளைத் தூண்டி, மோட்சத்திலே அவருக்குக் கிடைத்திருக்கும் மகிமைப் பிரதாபத்தை அவளுக்குக் காண்பித்தருளினர்.

"பரலோகம் திறக்கப்பட்டதையும், ஒரு சேர்த்தியான சிம்மாசனத்தில் சூசையப்பர் வீற்றிருப்பதையும் நான் பார்த்தேன். அவருடைய திருநாமம் உச்சரிக்கப்பட்டபோதெல்லாம் புனிதர்கள் யாவரும் அவர் பக்கமாகத் தலைகுனிந்தனர். அப்பொழுது அவர்களுடைய முகத்தில் காணப்பட்ட மகிழ்ச்சியை என்னால் வர்ணிக்க முடியாது. சூசையப்பருக்கு அத்தகைய மகிமை அளிக்கப்பட்டதையிட்டு அவர்களும் மகிழ்வதாக நான் அறிந்துகொண்டேன்" என்று அக்காட்சியைப்பற்றி ஜெர்த்துருத் அம்மாளே எடுத்துக்கூறியிருக்கின்றாள். அவ்வாறாக அவருடைய மன்றாட்டின் வல்லமையில் நம்பிக்கை வைத்து அவர் உதவியை நாடிய ஒரு கன்னியாஸ்திரியைப் பற்றிய சம்பவம் வருமாறு:

பிரான்ஸ்தேசத்தின் பெரிய நகரங்களில் லீயோன் என்பதும் ஒன்று. இந்த நகரிலே புனித ஊர்சுல் அம்மாள் சபைக்குரிய புராதன கன்னிகாமடம் ஒன்று இருக்கின்றது. அதிலே சூசைமாதவனில் மிகப்பக்தியாயிருந்த அருளம்மாள் என்ற ஒரு கன்னியாஸ்திரி இருந்தாள். அவள் செபதவத்திலும், சபைஒழுங்குகளைச் சட்டதிட்டமாக அனுசரிப்பதிலும், தேவகைத்தாதையான சூசைமாதவனில் கொண்டிருந்த பக்திவைராக்கியத்திலும் ஏனைய கன்னியாஸ்திரிகளுக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினாள்

— ஞானம் —

அவள் அந்தமடத்தின் முதலாளித் தாயாராய் இருந்துவந்த காலத்திலே ஒருமுறை கடுமையான நோய்கண்டு பாயும் படுக்கையுமாக விழுந்தாள். அப்பொழுது அவள பிதாப்பிதாவாகிய சூசையப்பரில் தான் கொண்டுள்ள பக்திகுன்றாது, சித்தங்கலங்காது, அவருடைய வல்லபமுள்ள மன்றாட்டில் மிகுந்த நம்பிக்கை வைத்து, அவரின் திருநாமத்தை அடிக்கடி உச்சரித்தபடியே அவரைப் பார்த்து உருக்கமாக மன்றாடிவந்தாள்.

அவ்வாறாக ஒருநாள் அவள் சடுதியாக அறிவுநினைவின்றியும், பேச்சுமூச்சின்றியும் அவஸ்தைப் படுகொண்டிருந்தாள். அவளைப் பரிகரித்துவந்த டக்றர்மாரும் அவள் உயிர்பிழைப்பது அசாத்தியமென்றும், இன்றைக்கோ, நாளைக்கோ அவள் இறுதிகண்டு விடுவாளென்றும் கூறி அவளைக் கைவிட்டனர். மடத்திலிருந்த கன்னியாஸ்திரிமாரும் தங்கள் முதலாளித் தாயாருக்கு நேர்ந்த கதியையிட்டு உளம் வருந்தினார்கள், அழுது கண்ணீர் உகுத்தார்கள்.

அப்பொழுது மரணப்படுக்கையாய்க்கிடந்த கன்னியாஸ்திரி ஓர் அதிசய காட்சியைக் கண்டாள். அதாவது அவள் படுத்திருந்த அறையில் திடீரென மிகுந்த பிரகாசம் உண்டாயிற்று. சுகந்த வாசனை பரிமளிக்கலாயிற்று; இன்னிசையான பேரின்ப கீதம் இசைக்கலாயிற்று. அத்தருணம் நீலவானிடையே, ஒரு வெண்மேகத்தின் நடுவே, காந்திவீசியபடியே, கரத்தில் ஒரு மெழுகுவர்த்தியை ஏந்திக்கொண்டு தனது காவற்சம்மனசானவர் ஓர் அழகிய வாலிபனைப்போல் இறங்கிவரக்கண்டாள்.

அவரைத் தொடர்ந்து சூரியனை மங்கச்செய்யும் சுடர்வதனத்தோடும், உலக அரசர்களைப் பார்க்கிலும் உயர்ந்த பிரதாபத்தோடும் பிதாப்பிதாவாகிய சூசையப்பர் எழுந்தருளினர். நடுத்தரவயதுள்ள உடல்வளமுடைய ஓர் ஆடவனுடையதுபோன்று அவருடைய முகச்சாயல் இருந்தது. தலைமயிர் சிறுக நரைத்துப் பொன்னிறமாய் இருந்தது. அவரின் உடையான துகளங்கமற்ற பளிங்குபோன்று வெண்மையாய் இருந்தது; அவருடைய தோற்றம் இராசதோற்றம் போல் கம்பீரமாயிருந்தது.

அவர் படுக்கையாக்ய்கிடந்த கன்னியாஸ்திரியின் பக்கமாகவந்தார். அருள்நோக்குடன் அவளைக் கூர்ந்து நோக்கினர். அவளுக்குப் பெரும் வேதனையை உண்டுபண்ணிய அவளுடைய பாரிசத்தைத் கரத்தால் தடவினர். அதில் பரிமளதைலம் பூசினர். அந்தச்சணமே பரிதிகண்ட பனிபோல் அவளுடைய நோய் அகன்றது. புத்துயிரும், புதுப்பலமும் பெற்றவள் போல் அவள் பூரண சௌக்கியம் அடைந்தாள். எவ்வித கஷ்டமுமின்றிப் படுக்கையை விட்டு எழுந்தாள், சூசையப்பரும் அவளை ஆசீர்வதித்தபடியே மறைந்துபோயினர். அவளும் முழந்தாட்படியிட்டு நெற்றி நிலத்திற்படக் குப்புறவீழ்ந்து தனது பேருபகாரருக்கு ஆனந்தக் கண்ணீர் பெருக நன்றியறிந்த தோத்திரம் சொன்னாள். அதனைக் கண்டு ஏனைய கன்னியாஸ்திரிகளும் ஆச்சரிய வசத்தராய்த் தங்கள் முதலாளித் தாயாரை அற்புதமாகக் குணமாக்கிய அம்மாதவளனை வாயார மனதார வாழ்த்திக் கொண்டாடினார்கள். அவளைப் பரிகரித்த டக்றர்மாரும் இச்செய்தியை அறியவந்து அங்குவந்து அவளைப் பரிசோதித்துவிட்டு, அதிசயமுற்றவர்களாய் இது புதுமை புது...னார்கள்.

## யாழ்நகர் பரி. கொஞ்சேஞ்சிமாதா பேராலயம்

## பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்

**22-3-70** திருப்பாடுகளின குருத்தோலை ஞாயிறு :

காலை 6–30 குருத்தோலைப் பவனியும், மேற்றிராணியாரின் பூசையும்.

**26-3-70** பெரிய வியாழன் :

காலை 6–30 மேற்றிராணியாரின் பரிசுத்த தைலங்கள் ஆசீர்வதிக்கும் பூசை.

மாலை 6–00 மேற்றிராணியாரின் இராப்போசன ஞாபக பாடற்பூசை (வெளியரங்கில்)

இரவு 11–00 திருமணித்தியாலம்.

**27-3-70** பெரிய வெள்ளி :

மாலை 5–30 ஆண்டவருடைய திருப்பாடுகளினதும், மரணத்தினதும் திருச்சடங்குகள் மேற்றிராணியாரால் நிறைவேற்றப்படும். பின்னர் சிலுவைப் பாதையும், சிலுவை முத்திசெய்தலும் (வெளியரங்கில்).

**28 3 70** பெரிய சனி :

காலை 6–30 பரிசுத்த தேவதாயாரின் ஏழு வியாகுலங்களைப்பற்றிய தியானம்.

இரவு 11–00 பாஸ்கா விழிப்புத் திருச் சடங்குகளும், மேற்றிராணியாரின் பெரிய பாடற்பூசையும்.

**29-3-70** பாஸ்கு ஞாயிறு :

காலை 5–30 முதற்பூசை. 6–30 இரண்டாம் பூசை (பாடற்பூசை). 7–30 மூன்றும் பூசை.

மாலை 5-00 முதற்பூசை 6-00 இரண்டாம் பூசை.

வாருங்கள், பாடுகளின் பாதையிலே பரமனைப் பின்செல்வோம்; பாவத்துக்கு மரித்து, உத்தான நாதருடன் சீவியத்துக் கெழுவோம்.

**பங்குக் குரவர்**

# சீமோன்கண்ட சிலுவைப்பலி

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் ஆணிகளால் அறைந்தார்கள். இரத்தம் குபீரெனப் பீறிட்டுப் பாய்ந்தது. அந்தப் பரிதாபக் காட்சியைக் கண்டு அவர் தாயார் அடைந்த வேதனையை என்னென்று சொல்வேன்.

மே. : — இத்தனை உபாதைகளையும் பொறுமையோடு சகித்த அந்தப் புண்ணியாத்துமா கடவுளின் அவதாரமாய்த்தானிருக்க வேண்டும்.

சீ. : — மேரி ! நீ அவரைப் பார்த்திருந்தால், தீட்சணியமான அவர் கண்களைக் கண்டிருந்தால் ஆச்சரியப்பட்டிருப்பாய் அவரைச் சிலுவையிலறைந்தபோது கதறியழவில்லை. சிலுவையை மலையுச்சியிலே நாட்டினார்கள். அவ்வேளை அவர் முகம் வெழுத்துவிட்டது. பிறரைக் காப்பாற்றவேண்டியவன் தன்னை ஏன் காப்பாற்றிக் கொள்ளவில்லையென்று, அந்தத் துஷ்ட யூதர்கள் நையாண்டி செய்தனர் அதற்கவர் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவ்வேளையிலும் அவர்களை மன்னிக்கும்படியே பிதாவைப் பார்த்து மன்றாடினார் அவர் மிகவும் ஆச்சரியமானவர். சித்திரவதை செய்தவேளையிலும் பிறரைப்பற்றிய சிந்தனைதான். தண்ணீர்த் தாகத்தால் நாவரளத் தண்ணீர் கேட்டார். கைப்பான காடியைக் கொண்டுவந்து கொடுத்தான் ஒரு காதகன். ஈட்டியால் விலாவைக் குத்தித்திறந்தான் மற்றோர் பாதகன்.

> எழுத்தாளா, கவிஞர்களின் பல விடயதானங்கள் இடமின்மை காரணமாக இம்முறைக் காவலனில் இடம் பெருமை குறித்து வருந்துகிறோம்.
>
> — நிர்வாகி

மே. : — அப்பப்பா ! அக்கிரமம், அக்கிரமம்.

சீ. : — கொடுமை. கொடுமை. இவ்வாறு மூன்றுமணித்தியாலம் மட்டும் மரணவேதனையனுபவித்தபின் தன் பிதாவை நோக்கி ஆறு அமிர்த மொழிகளைத் திருவாய்மலர்ந்தருளினர். அதன்பின் என் பிதாவே ! என் பிதாவே ! எனதாத்துமத்தை உமது கையில் ஒப்படைக்கிறேன் என்று ஏழாம வசனம் திருவுளம்பற்றியபின் நெட்டுயிர்ப்பெறிந்து கண்கள் ஏறச்செருகத் தலைகுனிந்துயிர்விட்டார். அவர் ஆவிபிரிந்தது. அவ்வமயம் அவர் தாயார் தாங்கொணுத வியாகுலத்தால் அழுது பிரலாபித்ததைக் கல்நெஞ்சர்கூடப் பார்த்துச் சகித்திருக்க மாட்டார்கள்.

மே. : — இத்துயர செய்தியைக் கேட்கும்போது எனக்கும் அழுகைதான வருகிறது.

சீ. : — உனக்கு மட்டுமென்ன ? எனக்குந்தான். அவர் உயிர்விட்டபோது நடந்த அற்புதங்களோ பல. சூரியன் மறைந்து வானததிலும் பூமியிலும் அந்தகார இருள் சூழ்ந்தது. இடிமுழக்கமும் மின்னலும் உண்டாயின. பூமி பிளந்துகல்லறைகள் திறபட்டு மரித்த ஆத்துமங்கள் உயிர் பெற்றெழுந்து அங்குமிங்கும் ஓடின. கோயிற் திரைகள் கிழிந்தன. வானமண்டலங்கள் அதிர்ந்தன. எங்கும் சோகத்தின் சாயலே சூழ்ந்தது.

மே. :— அத்தனை அற்புதங்கள் நடந்ததென்றால் உண்மையிலே அவர் ஆண்டவரின் அவதாரமாய்த் தானிருக்க வேண்டும்.

சீ. : — சந்தேகமில்லை மேரி: சனங்களோ அந்தச் சிலுவையைச் சுற்றி வந்தார்கள்: முழந்தாட்படியிட்டு வேண்டுதல் செய்தார்கள். அவர்களனைவரும் அந்த மகானிடத்தில் மிகுந்த அன்புள்ளவர்கள். அவரிடம் யாருமே அன்புகொள்ளாமல் இருக்க முடியாது. அந்த யூதர்கள் சிலுவையின் மேலே யூதர்க்கு இராசாவென்று எழுதியிருந்தார்கள். உண்மையாகவே அவரொரு அரசன் தான்; சாதாரண அரசனல்ல, வானுலக அரசன். மனித இருதயங்களைக் கொள்ளை கொண்ட மன்னன். அப்பாடா அவர் முகத்தைப் பார்த்தாலே தெய்வகளை வீசுகிறது. அவர் பிரிவாற்றுமையால் அத்தனை பக்தர்களும் அவ்விடத்தில் அழுது புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

மே. : — தாங்கள் சொல்வதைக் கேட்கும்போதே எனக்கும் அவர் பெயரில் அன்பும் அபிமானமும் பக்தியும் உண்டாகிறது. இத்தகைய மகத்துவமான குணங்கள் மிக்கவர் உண்மையிலேயே மனிதகுலத்தை இரட்சிக்க மனுவுருவாய் வந்த இயேசுக்கிறிஸ்துவாய்த் தானிருக்க வேண்டும்.

சீ. :—இன்னுமா சந்தேகம் ? அவர் உயிர்விடும்போது அங்கு நடந்த அற்புதங்களைக் கண்டு தேவ குமாரனுகிய இயேசுவென்றுதான் எல்லோரும் அவர் பாதத்தில் விழுந்து நமஸ்கரித்தார்கள். அயலாரின் பாவமன்னிப்பிற்காகத் தன்னுயிரையே தியாகஞ் செய்த அந்த மகான் உலகிலே ஒப்புயர்வற்ற தியாகியே தான்.

மே. : — உம். பிறகென்ன நடந்தது ?

சீ. : — அவர் சடலத்தைச் சிலுவையில்நின்றிறக்கி அடக்கம் செய்வதற்காக ஜோசே நிக்கதேமுஸ் என்ற இருவர் அரசனிடம் அனுமதிபெற்று வந்தனர். இயேசு பெருமானின் திருவுடலைச் சிலுவையில் நின்றிறக்கித் திருத்தாயாரின் மடியிலே வளர்த்துகிறார்கள். அந்தத் தாயாரின் பெற்ற வயிறு பற்றியெரிந்த தன்மையை அவ்வமயம் யாரால் சகித்திருக்க முடியும் ?

மே. :—பத்துமாதஞ்சுமந்து பெற்று வளர்த்த அன்னையால் இத்துயரைக் கண்டு எவ்வாறு பொறுத்திருக்க முடியும் ?

சீ. : — ஐயோ பரிதாபம். மாதாவின் மடியிலிருந்து திருக்குமாரனின் சடலத்தையெடுத்துப் பரிவட்டத்தால் சுற்றிப் பரிமளதைலங்களிட்டு ஒரு கல்லறையிலே அடக்கம் செய்தார்கள். பாவிகளை ஈடேற்றி அவர்களது ஆத்துமங்களை மோட்சஇராச்சியத்தில் சேர்க்கும் பொருட்டே படாத உபாதைகள் பட்டுச் சிலுவையிலே தன்னுயிரைப் பலியாக்கினர் இயேசு பெருமான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதை நினைந்தழுவோம்?

யாழ் — "ஜெயம்"

பூங்காவில் தனிமையிலே வலிமைகுன்றிப்
புகலேதுங் காணுது வருந்திநொந்து
நீங்காதோ இத்துயரம் என்றேயேங்கி
நிர்மலனைக் கையெடுத்து நெஞ்சம்விம்மித்
தாங்காது வியர்வையெனக் குருதிசிந்தித்
தவித்ததிரு மகனுக்காய் அழுவோமோநாம்?
ஆங்காரம், பகை, வஞ்சம், கயமைபொங்கி
அழிகின்ற நமதுநிலைக் கழுவோமோநாம்?

●

கூடியிருந் துண்டுசுகித் தனுபவித்தோர்
கொலைகாரர் குறிவைத்துப் பிடித்தபோது
ஓடியொளிந் திடவுள்ளம் உருக்குலைந்து
உடலமெலாம் கசையடியா லுரிக்கப்பட்டு
வாடிவிழுந் துதிரமெலாம் ஆருயோட
வாதையினுல் துடித்தவர்க்காய்
அழுவோமோ நாம்?
கோடிபல கோடியெனக் கேடு சூழுங்
கொடியவரெம் பழிநினைந்திங்
கழுவோமோநாம்?

●

தூயமலர்ச் சேவடிகள் பாறைமீதே
துவண்டுவிழக் கல்வாரி மலையைநோக்கிப்
பாரமரச் சிலுவைதனைத் தோண்மேலேந்திப்
பரிகாச நிந்தைகளுக் கூடாய்ப்போக
ஆருயிரே! என்னமுதே! அமுதேயென்று
அன்னைமரித் தாய்துடிக்க அந்தோ! அந்தக்
கோரதுயர் சகிப்பவர்க்காய் அழுவோமோ? நம்
கொடியபவங் கண்டுமனங் குமுறுவோமோ?

●

நீளமரச் சிலுவைதனிற் கால்கைநீட்டி
நெட்டிருப்பி ஞணிகளால் அறைந்திறுக்கி
ஆழமுறு குழிதனிலே நிறுத்தி "எங்கள்
அரசனிவன்" என்றெள்ளிச் சிரித்தார்; தாக
வேளையினிற் காடிதனைக் கொடுத்தார்; இந்த
வேதனைகள் அத்தனையும் பொறுத்தே எம்மை
மீளுதற்கு வந்தவர்க்காய் அழுவோமோ? நம்
மிகக்கடின மனநிலைக்காய் உருகுவோமோ?

## சுதந்திரத் திருவிழா

### "நாட்டிற்கு வாழ்வு தந்தது சுதந்திரத் திருவிழா! மானிடர்க்கு வாழ்வு தந்தது பாஸ்குத் திருவிழா!"

கடல். கடலிலே நீர். நீரிலே அலை. அலைபோகுமிடமெல்லாம் கரை. அலை, கரையை நோக்கித் தாவுகின்றது. கரை அலையைத் தடுக்கின்றது. அலை சுதந்திரமாகச் செல்ல விரும்புகின்றது.

கம்பி. கம்பியினுல் கூடு. கூட்டினுள்ளே கிளி. சிறகடிக்கின்றது. பறக்க முயல்கின்றது. வெளியேறுவதற்குக் கம்பிகள் தடை. கூட்டின் கிளியும் சுதந்திரத்தை விரும்புகின்றது.

உலகம். உலகிலே குளங்கள்; குளத்தின்கீழ் வயல்கள்; வயலிலே ஏர்; ஏரிலே மாடு; உணவின்றி உழைக்கின்றது. அதுவும் சுதந்திரமாக வெளியேற முயல்கின்றது.

மிருகக்காட்சிச்சாலையிலே ஓர் அறை. அறை முழுதும் இரும்புக் கம்பியால். உள்ளே உறுமும் வேங்கைப்புலி. வெளியேறத் துடிக்கின்றது; கதறுகின்றது; பாய்கின்றது. சுதந்திரமாக வெளியேவர ஆசிக்கின்றது.

நகர். நகரிலே ஒரு சிறைச்சாலை. அதனைச் சுற்றி மதில்கள். மதிலினுள்ளே ஓர் அறை. அறையின் வாயிலில் இரும்புக் கம்பிகள்; அதனுள்ளே ஒருமனித உருவம்; கொலைக் கைதி; கம்பியைத் தடவுகின்றான்; வளைக்கின்றான்; உடைத்து வெளியேறத் துடியாய்த் துடிக்கின்றான். தரணியின் மனிதரைப் போல் தானும் சுதந்திரமாய் வாழ அவாவுகின்றான்.

மனிதன் ஆறறிவு படைத்தவன்; பகுத்தறிவற்ற மிருகங்களிடமிருந்து அவனைப் பிரித்துக் காட்டுவது, புத்தியும, மனதும் சேர்ந்த பகுத்தறிவுதான். இந்த அறிவிலும், கலை நுட்பத்திலும், தொழிற்



திறமையிலும் துலங்குகின்றது அவனது மாண்பு. இந்த மாண்பு சுதந்திரத்தை விரும்புகின்றது. இது இயற்கை.

— ச. வில்பிரெட் —

"எல்லோரும் சுதந்திரமாகவும், பொறுப்பாகவும் வாழும் உரிமை மானிட மாணபுக்கு அவசியம்" என்கிறர் திருத்தந்தை 23-ம் அருளப்பர்.

எனவே, சுதந்திரமின்றி மாண்பு இல்லை; மாண்பு இன்றி மனித வாழ்வு இல்லை. ஆகவேதான் மனிதன் சுதந்திரத்தைத் தேடி அலைகின்றன்.

முடி ஆட்சி வேண்டாமென்று வாதாடினுன். சுதந்திரக் குடியாட்சி வேண்டுமென்று வழக்காடினுன் அமெரிக்கன். பெற்றுக் கொண்டான் சுதந்திரத்தை ஆடித் திங்கள் 4-ம் நாள். அது அவர்களுக்குப் பொன்னுல் பொறிக்கப்பட வேண்டிய நாள்.

குடியுரிமை, வாக்குரிமை வேண்டுமென்று கொக்கரித்தான் பிரான்ஸ் நாட்டான்.

அவனும் பெற்றுக் கொண்டான் சுதந்திரத்தை. வைகாசித் திங்கள் 8-ம்நாள். அது அவனுக்குப் பொன்னுள்.

"வெள்ளையனே வெளியேறு", "எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று வீர முழக்கமிட்டான் இந்தியன். சுதந்திரம், சுயஉரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை என்று சுற்றி அலைந்தான்; வாதாடினுன்; வாழ்வைக் கண்டான்.

ஆவணித் திங்கள் பதினைந்தாம் நாள், அவர்களது வரலாற்றில் பொன்னுல் செதுக்கப்படவேண்டிய நன்னுள், சுதந்திரத் திருநாள்.

மாசித் திங்கள் நாலாம் நாள். அது எம் உள்ளங்களை உவகை வெள்ளத்தில் ஆழ்த்தும் உயர் நாள்; இலங்கை ஆங்கிலேயரின் ஆட்சியினின்று விடுபட்ட சுதந்திர நாள.

இது வரலாறு கண்ட உண்மை, நாடுகள் தோறும், தேசங்கள் தோறும், மனிதன் சுதந்திரம்! சுதநதிரம்!! என்று பாடினுன்; எழுதினுன்; பேசினுன்; வீரமுழக்கமிட்டான்; மரணப் போரிட்டான்; வெற்றியும் கண்டான். அதற்கொரு விழாவும் எடுக்கின்றன்.

இதேபோல் கிறீஸ்தவர்களாகிய எமக்கும் ஒரு சுதந்திரத் திருவிழா உண்டு. அதுதான் பாஸ்குத் திருவிழா.

வெள்ளையர்களின் கையிலிருந்து— பிரான்சுக்காரரின் பிடியிலிருந்து—அரசர்களின் ஆட்சியிலிருந்து மக்கள் நாட்டைப்பெற்று புதுவாழ்வு, சுதந்திரவாழ்வு வாழ்வது போல்,...

நாமும் சுதந்திர வாழ்வு, புதுவாழ்வு வாழ்கின்றோம். மாற்றுனின் மாய்கையால் மனுக்குலம் வீழ்ந்தது; அடிமையுற்றது; மாற்றுன் (சாத்தான்) வலையில் சிக்கிப் பரிதவித்தது. பசாசுக்கு அடிமைப்பட்ட மானிடரை விடுதலை செய்ய, சுதந்திரம் பெற்றுத்தர பரமன்யேசு பாரிலே தோன்றி, உயிரை ஈந்து விடுதலை தந்தார், பேயை வென்றார்.

விடுதலை (சுதந்திரம்)பெறத் துடித்த மக்கள் குருதிசிந்தி, சுதந்திரம் பெற்றதுபோல், மனுமகன் யேசு தனது சொந்த இரத்தத்தைச் சிந்தி மானிடரை மீட்டார்; விடுதலை பெற்றுத் தந்தார்; சுதந்திரம் அடைந்து தந்தார்; அடிமையற்ற புதுவாழ்வு, சுதந்திர வாழ்வு தந்தார்.

எனவே நாம் இனி அடிமைகள் அல்ல, கிறீஸ்து எமக்கு விடுதலை அளித்த — சுதந்திரம் நல்கிய பேயை வெற்றி கொண்ட சுதந்திரத் திருநாள் பாஸ்குத் திருநாள் — உயிர்ப்புத் திருநாள்— இரத்தினக் கற்களால் பொறிக்க வேண்டிய இன்பநாள்.

## சீவியம் அளிக்கும் ஞாபகச் சின்னங்கள்

மானிலத்தில் மக்கள் வாழ்ந்தனர் – வாழுகின்றனர்– எதிர்காலத்தில் வாழ்வர். வாழுகிறவர்களைக் காலம் சும்மாவிட்டு வைக்கப்போவதில்லை. அனைவரும் மாழவேண்டியவர்கள் தான். ஆனுல்... மனித சமுதாயத்திலேமகத்துவசாதனைபுரிந்த மகான்கள்--தியாகச் செயல்கள் புரிந்த தீரர்—வீரச் செய்கைகளால் பெயர் நிலைத்து வாழும் வீரர் – சரித்திரத்திலே சாதனை நிலைநாட்டிய சரித்திரப் புருடர்கள்—பெரியோர் எனப் போற்றப்பட்டோர்-அறிஞர் என அறியப்பட்டோர் அத்தனை பேரும் அழிந்தனர் – மறைந்தனர் – இறந்தனர்—மண்ணேடுமண்ணுயினர். ஆனுல் அவர் புகழ்.. மகான்களுக்கு மணிமண்டபம்! தியாகிகளுக்குக் கற்சிலை; பொற்சிலை! வீரருக்கு ஞாபகார்த்த மண்டபம்! சரித்திர புருடருக்கு எதிர்காலச் சரித்திரத்திலே ஓர் இடம்! பெரியோர்க்கு அஞ்சலி! இவை அனைத்திற்கும் ஒரு முடிவு உண்டு. பூதஉடம்பு அழிந்தது. ஆனுல் புகழுடம்புமட்டும் குன்றின் மேலிட்ட தீபம்போல் சுடர்விட்டெரிகிறது. அந்தக் குன்று நிலைபெயர்ந்தால் இல்லை கடும்புயல் வீசினுல் சுடரே அணைந்துவிடும்.

இவை ஏன் ......?

இவையெல்லாம் எதற்காகக் கூறப்பட்டன? மனதிலே ஒரு கேள்வி எழலாம். மணி மண்டபமும் – நினைவுச் சின்னமும் – சரித்திரச் சான்றும் – மங்காப் புகழும்

இ. பேர்னுட்

என்றும் எங்கும் நிலைத்திருக்குமா? இல்லை. பெரியோர் பலர் மறக்கப்பட்டனர். அவர்களின் அழியாச்சின்னங்களெனப் புகழப்பட்டன எல்லாம் அழிந்தொழிந்தன.

இன்றுவரை 2000ஆண்டுகளுக்குமுன் உலக வரலாற்றிலே நடைபெற்ற உணர்ச்சிமிக்க நிகழ்ச்சி! கிறிஸ்துவின் இரட்சணிய நிகழ்ச்சி! அவனிமீது கொண்ட அளவற்ற அன்பை மறக்கமுடியவில்லை. அதை மறைக்க முடியவில்லை – மக்கள் மத்தியில் என்றும் வாழ – நீங்கா நினைவுபெற – தம்மையே அவர்களுக்களிக்க – உலகம் உள்ளவரை அவர்கள் உள்ளத்தில் நிலைகொள்ள ஒரு வழிவகுத்தார் வாழ்விக்கும் வள்ளல் கிறிஸ்து. ஆம், அதுதான் பெரிய வியாழன் தந்தபெருவிருந்து! நம்மைப் புனித வாழ்வடையச் செய்யும் அருமருந்து! உருவத்தால் எம்மிடமிருந்து மறைந்தார். ஆனுல் அப்பரச உருவத்திலே எம்மத்தியில் வாழுகிறர் – வாழ்வார். இதைவிட வேறு ஞாபகச் சின்னம் உண்டோ? மணிமண்டபம் தானுண்டோ? சரித்திரம் இந்நிகழ்ச்சியைத் தட்டிக் கழிக்கவில்லை, நாள்தோறும் நமது பீடங்களில் மீண்டும் மீண்டும் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியே இல்லையென்றுல் நமது விசுவாசமேவீண். பலி இல்லை. அதனுல் வீண் பழியே நம்மைச்சாரும். கிறிஸ்துவும் இத்தனைக்கும் பொருத்தமானவரே தான். சரித்திர புருடராய் – உயிரீந்த தியாகியாய், உலகுஉவக்கும் உத்தமராய் அழியா ஆன்மஉணவு அளித்த வள்ளலாய்த் திகழ்கிறர்.

பெரிய வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியின் ஞாபகம்தான் இது. ஞாலம் உள்ளவரை இது நிலைத்திருக்கும்.

இவை காலத்தால் அழியாத ஞாபகச் சின்னங்கள். உலகம் உள்ளவரை என்றும் நிலைத்துநின்று கிறிஸ்துவை உலகிற்கு ஞாபமூட்டிக் கொண்டேயிருக்கும்.

நமக்கு மீட்பளித்த சிலுவையும் ஒரு ஞாபகச் சின்னம். அன்றையநாளில் அவமானச் சின்னமாகக் கணிக்கப்பட்ட இச்சிலுவை இன்று அன்புச் சின்னமாகப் பிணிக்

(தொடர்ச்சி 10-ம் பக்கம்)

சிலுவையில் மீட்பு; சிலுவையில் வாழ்வு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுத்தவாரச் சிந்தனையே விண்ணரசின் பாதையைச் செப்பனிட வேண்டியது

குருத்தோலைஞாயிறு தொடக்கம் நம் அன்பின் இரட்சகரின் பாடுகள், மாணம், உத்தானம் என்பவற்றை அடக்கிய உத்தான ஞாயிறுவரையுள்ள காலத்தை, நம் திருச்சபை பரிசுத்தவாரமாக மதித்து, புனிதமாக அனுசரித்து வருகிறது. இக்குறுகிய காலத்துள், நம்மீட்பரின் கடைசிக் காலச் செயல்களையும், அவரின் அரிய போதனைகளையும், அவரின்பாடுகளையும், சிலுவை மரணத்தையும் நம்கண்முன் வைத்துச் சிந்திக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். இச் சிந்தனையே விண்ணரசின் பாதையைத் தயாரிக்கத்தக்கதாய், நம்மை அவருடன் ஒன்றித்து, செபத்தாலும், தபத்தாலும், தியானத்தாலும் முன்னேறிச் செல்ல உதவிபுரிகின்றது.

நம் அன்பின் இரட்சகரின் சுவிசேஷத்தைப் புரட்டுவோமானல், அவர்தம் மரணவேளை அடித்தபோது, தமது மரணத்தையும், உயிர்ப்பையும்பற்றிய அருள்வாக்குகளை மக்களுக்கு எவ்வளவு விளக்கமாக அறிய வைத்தார் என்று கண்டறியலாம். பெத்தானியாவில் லாசருவை உயிர்ப்பித்த நம்மீட்பர் அவரின் சகோதரியை ஆறுதல்ப்படுத்திய போது, (பரி. அரு. 11-ம் அதி. 25-ம் வச.) "உயிரும் உத்தானமும் நாமே. என்னை விசுவசிக்கிறவன் இறந்தாலும் பிழைப்பான்" என்று கூறினர். அப்படியே எருசலேம் தேவாலயத்தைப் பற்றிய சம்பாஷணை நடந்த போது, "இத்தேவாலயத்தை இடித்துப்போடுங்கள். நான் அதை மூன்றுநாளில் கட்டியெழுப்புவேன்" என்று தமது மரணத்தையும், உயிர்ப்பையும விளக்கினர்.

அவர் தமது கஸ்திகளையும் மரணத்தின பேறுகளையும, அருள் வாக்குகளாகவும, அருட்கொடைகளாகவும் அன்பளிப்புச் செய்தார். மரணத்தின் முதல்நாள் வியாழக்கிழமை இரவு, "எனது கடைசி விருந்தை உங்களுடன் புசிக்க ஆசைமேல் ஆசையாய் இருக்கிறேன்" (பரி. லூக். 22:15) என்று சொல்லி, தம்மைத் தாழ்த்தி, அப்போஸ்தலர்களின் பாதங்களைக் கழுவினர். அவரது தெய்வீக அன்பை எப்படி வர்ணிப்பது? அத்துடன், தாய்மையே தமது அன்பு முழுவதையுமே, ஒருங்குசேர்த்து, ஆன்ம போசனமாக்கி, அப்ப இரசக்குணங்களில் அமைத்து, "இது என் சரீரம்; இது என் இரத்தம்!? என்று விருந்தளித்தார்.

மட்டற்ற சிநேகம்நிரம்பிய இப் பிரியாவிடை விருந்து, தாம் மறுதினம் பலியாகப் போகும் மரணத்தினதும், அதன்பின் அடையும் உத்தானத்தினதும் அறிகுறி என்பதை எண்பித்தார். இதைப் பற்றி நம் பரி. சின்னப்பர் கூறவந்த தம் நிருபத்தில் "நாம் கிறிஸ்துவுடன் மரித்தோமானல், கிறிஸ்துவுடன் உயிர்ப்போம்" என்கிறார். அத்துடன் கிறிஸ்துநாதர் தேவனும் மனுஷனுமாக இருந்து, நம்மையும் பிதாவையும் எப்படி ஒன்றிக்கவைக்கிறரோ அப்படியே, திவ்வியநற்கருணை வழியாக, நமமைத் தம்முடனும், தமது உறுப்புக்களான சகல விசுவாசிகளுடனும் ஒன்றிக்கச் செய்கிறார் என்று தெளிவாக விளக்குகிறார் (1-ம கொரி. 10-ம அதி. 17-ம் வச) "அந்த ஒரே அப்பத்தில் பங்குபற்றுகிற நாம், சகோதரராய் இருந்தாலும், ஒரே சரீரமாய் இருக்கிறோம" என்கிறார்.


— நாதன் —

அடுத்தபடியாக, ஜெத்சமனிக்குச் செல்லும் நம் அன்பின் தெய்வம் என்ன செய்கிறார்? தமது பிரிய சீடரை வெளியேவிட்டு, தோட்டத்தின உட்சென்று பிதாவின் சித்தத்தை நிறைவேற்றத் தனிமையில் செபித்து, தம்மைத் தயாரிக்கிறார். "ஆத்துமம் வேகம் உள்ளதுதான். சரீரமோ துர்ப்பல முள்ளது" என்று கூறி, அயர்ந்த நித்திரையில் இருக்கும் தமது சீடரை எழுப்பினர். "ஒருமணி நேரம் என்னுடன் விழித்திருக்க முடியாதா"? என்று முறைப்படுகிறார். திரும்பவும் தனிமையி சென்று செபிக்கிறார். அவரது ஞானக்கண்முன மக்கள் அனைவரதும பாவங்கள் காட்சியளிக்கின்றன, பயந்து நடுங்குகிறார். தலையில் மும்முறை விழுந்து பிதாவை நோக்கி, பிதாவே! "கூடுமானல் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு அகலட்டும் ஆயின், என் மனதின்படியல்ல, உமது சித்தத்தின்படி ஆகட்டும்" எனறு செபிக்கிறார். தேவனை நேசிப்பதால் அவரின் சித்தத்தை ஏற்கிறார். அதே நேரத்தில் மனுமக்களை நேசிக்கிறார். அதனல், பாடுகளை ஏற்கிறார். மக்களது பாவத்தினல் தாம் அனுபவிக்கப்போகும் பாடுகளின் அகோரக் காட்சிகள் கண்முன் நிற்கின்றன. அவரது தேவசிநேக, பிறர் சிநேகப்போராட்டம் அவரது இருதயத்தையும், சரீரம் முழுவதையுமே உலுப்பிவிட்டது என்பதை அவரது இரத்த வியர்வையே நமக்குச்சாட்சி பகருகின்றதே! எனினும், அவரது தனிச் செபத்தினல் தம்மைப் பிதாவின் சித்தத்துக்கு அமைய ஆக்கியவலிமை, தமது சீடரைத் திரும்பவும் தட்டியெழுப்பி, "எழுந்திருங்கள் மனுமகன் பாவிகள் கையில் அகப்படும் நேரம் வந்துவிட்டது" என்று வல்லமையுடன் கூற வைத்தது.

மனுமகன் பாவிகளுக்குத் தம்மையே கையளிக்கிறார். அப்போஸ்தலரைப் போகும்படி அனுப்பி, "பிதாவானவர் எனக்குக் கொடுத்த பாத்திரத்தை நான் பானம்பண்ணுதிருப்பேனே?" என்று கூறி, போர்ச் சேவகரின் கையில் அகப்படுகிறார். அதன்பின் நம் இரட்சகர் பட்டகஸ்திகளையும், அடிகளையும், ஆறுட்டங்களையும், மரண வேதனைகளையும் மனிதர் வாக்கால் வர்ணிக்க முடியுமா? இவவளவு நீசத்தனமான அக்கிரமங்கள் மத்தியிலும, அவர் மக்களுக்காக, நோத்துக்கு நேரம் செப்பிய அருள் மொழிகள் நம்மைச் சிந்திக்கச் செய்கின்றன. கல்வாரிமலை நோக்கிச் சிலுவைப் பாரத்துடனும், மரணவேதனையுடனும் செல்லும்போதும், தம்மைப்பின்சென்ற புண்ணிய ஸ்திரிகளுக்கு, "எனக்காக அழவேண்டாம். உங்களுக்காகவும், உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள்" என்று கூறிச் சிந்திக்க வைத்தார்.

(தொடர்ச்சி 11-ம்பக்கம்)

## சேவுகர்கள் அடித்தாரே



இவரிடமே குற்றமில்லை என்றுசொன்ன பிலாத்துவுமே
எவரிடமும் இயேசுவையே கையளித்து விட்டிடாமல்
சுவரினிலே தன்கையால் எழுதுமந்த ஓவியன்போல்
அவரையுமே விட்டுவிடல் வேண்டிடுமே இந்நிலத்தில்

* * *

இப்படியே இயேசுவுக்கு அன்றுநடந் திடவில்லை
எப்படியும் நானும்நல் வாராலடிப் பித்துவிட்டு
அப்படியே அவரையும் விடுதலைசெய் வேனெனச்
செப்பினனே பிலாத்துவும் யூதர்கள் தம்மிடமே

* * *

வந்தனர்கள் சேவுகர்கள் வாருடனே அவ்விடத்தில்
இந்தமனி தரைநீரும் அடிப்பித்து விட்டபின்னர்
இந்தஇடம் கொண்டுவாரும் என்றுதான் கூறினனே
அந்தநிமி டத்தினிலே அவர்களும் ஏற்றனரே

* * *

கற்றூணிற் கட்டினர்கள் கரவில்லா மனிதனையே
சுற்றத்தார் எவருமில்லாச் சுகமான அம்மனிதர்
பற்றுக்கள் துறந்தஅவர் பாரினிலே மனிதனுன
எத்திக்கும் போற்றுகின்ற கடவுளான யேசுவையே

* * *

ஆணிகள் இருக்கின்ற கொடியஅந்த வாரினலே
தூணிலே கட்டுண்ட துயரமுள்ள மனிதரையே
சாணுமே நகரமுடி யாதஅந்தக் கடவுளையே
ஆணுவத் துடனேயே சேவுகர்கள் அடித்தாரே

* * *

இரத்தமும் ஆருக ஓடியதே அடித்தவேளை
பரத்தினில் வானதூதர் பார்த்தனரே கண்கொட்டா
தரத்தினிலே உயர்ந்தஅவ் மனிதரும் பொறுத்தனரே
இரத்தத்தினல் உலகினிலே மனிதரையும் மீட்டனரே

— பாக்கியம்

## எல்லாம் முற்றிற்று!

இத்தெய்வீக வார்த்தையால் எல்லோருக்கும் நித்திய சீவியத்தை உறுதிப்படுத்திவிட்டார் கிறிஸ்து! இவர்தான எங்கள் ஆண்டவர். பாவவிமோசனத்திற்கு அவதாரமான தேவவார்த்தையான வரும் இவரே. சீவியமும் வழியும் நானேஎன்று கூறியவரும் இவரே. எனவே எல்லோரும் கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் கல்வாரியையும் ஏற்றுக்கொள்வோம். கல்வாரியின் உச்சமே கிறிஸ்துவின் விருதுக்கொடியை என்றும் உலகிற்கு அளிக்கிறது.

### நேரம் நின்றுவிட்டது

எப்படி நேரம் நின்றுவிட்டது? ஏன் நேரம் நின்றுவிட்டது? தேவனே இதற்குச் சாட்சி. சற்றுச் சிந்திப்போம். எப்பொழுதும் காலையில் சூரியன் உதயமாகிறது. அதே சூரியன் மாலையில் அஸ்தமிக்கிறது. இரவும் பகலும, நாளும் கிழமையும், மாதமும் வருடமும் இடைவிடாது சுழன்றுகொண்டு வருகிறது. இடைவிடாது மாற்றமடையும இவ்வுலகில் நிலைத்திருக்கும் மாற்றமில்லாத ஆனந்தத்தையடைய அயராது உழைக்கிறன் மனிதன! இதை எப்படி உலகம அளிக்கமுடியும்? உலகம் அளிக்கும் சந்தோஷமோ நிலையற்றது. மனிதனின் அமைதியையும் சாந்தியையும் குலைக்கிறது. உலகமும் உலகப்போக்கும் பிளவுகளையும் பகையையும் உலகில் வருவிக்கிறது. பொன்னும் வெள்ளியும், மாமிசமும் சுயநலமும் எப்படிச் சமூகத்தை ஐக்கியப்படுத்தும்? எப்படி உலகம் தனிமனிதனில் ஒற்றுமையையும் சமாதானத்தையும் உருவாக்கும்? இப்படி

(பி. ஜே. அமிர்தநாயகம்)

யானல் மனிதனுக்கும் சமூகத்திற்கும் சாந்தியில்லையா? இல்லையென்றுதான் உலோகாதயக்கொள்கையினர் கூறுவர். ஆனல் கிறிஸ்து உலகத்தை ஜெயங்கொண்டார். அவர் காலத்தையும் நோத்தையும் கடந்தவர். எனவே "எல்லாம் முற்றிற்று" என்று உலகிலிருந்தும் தன்னில் விசுவாசமுடையோர்க்கு விமோசனத்தையும் சமாதானத்தையும் நித்திய சீவியத்தையும் அளித்தார் கிறிஸ்து. அவரில் விசுவாசமானோர் உலகில் இருந்த போதும் உலகைக் கடந்துவிட்டனர். காலத்திலும் சுயநலத்திலும் வசப்பட்ட உலகம அவர்களைப்பாதிப்பதில்லை. மனிதனின் முயற்சிகள் இப்பொழுது கடவுளில் முயற்சியாகிவிட்டது. எனவே கடவுளில் என்றும் உள்ள சாந்திக்கு அவர்கள் உரித்தாளராய்விட்டார்கள். இச்சமாதானத்தைக் குறித்தே வார்த்தையானவர் மாமிசமான போது வானதூதர் "நல்மனமுள்ளோருக்குச் சமாதானம" என்று பாடினர்.

### கோலத்தில் அலங்கோலம்!

சடப்பொருள்களும் தாவரங்களும் மிருகசெந்துக்களும் இயற்கையின் விதிகளை ஓர் அணுவளவேனும் தவருது அமைகின்றன. இவைகள் தங்கள் கர்த்தரை இடைவிடாது போற்றுகின்றன. ஆனல் மனுக்குலமோ அபபடியில்லை. அவரின் சித்தத்தைத் தேடாது அலங்கோலமாய்நடக்கிறன் மனிதன். கர்த்தர் அவனுக்குஅளித்த புத்தியால் இயற்கையின் விதிகளை விசாரித்து அறிந்து, இயற்கைத் தத்துவங்களுக்கு எசமானகித் தனக்கு இயற்கையை உபயோகிக்கும் மனிதன் தன்னைச் சரியாய்க் கொண்டு நடத்த முடியவில்லை. கர்த்தரைப் புகழ்ந்து போற்ருது நடக்கிறன். தனிப்பட்ட முறையிலும் சமூகத்திலும் எல்லாம் அலங்கோலம். இதுவே கோலத்தில் அலங்கோலம் என்கிறோம். மனிதனிலுள்ள சடப்பொருளும் தாவர மிருகநாட்டங்களும் அவனை அடிமையாக்கி விட்டன. புறத்தே விஞ்ஞான எசமான்! உள்ளே அஞ்ஞானத்

(தொடர்ச்சி 10-ம்பக்கம்)

சிலுவையில் பகைவனுடைய எதிர்ப்புக்குப் பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமர நிழலில் மாதர் கூடினால்.....

அன்னுப்பாட்டி— பேப்பரிலே என்ன மேனை புதினம்: உந்தப் பாலேதிவைப்பற்றி ஏதும் வந்திருக்கோ?

ரஞ்சிதம் — பாலேதிவு, பாலேதிவென்று கத்தினீர்களே. சிலபேர் அந்தோனியார்மீது பழிபோட்டீர்களே. இந்தப்புதினத்தைக் கேளுங்கோ. மெக்காவுக்கு யாத்திரைக்குச் சென்று திரும்பிய 105மூஸ்லிம் பக்தர்கள் படகுவிபத்தில்மாண்டுபோனூர்களாம்.

ஜெயா—ரீச்சர், இதைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

மங்களம் ஆசிரியை—இன்பம் இல்லாமல் துன்பம் இல்லே. மரணம் கள்வனைப் போல வரும். சுகதுக்கம் சுழல் சக்கரம் என்ற பழமொழிகளைத்தான் சொல்லக்கூடும். அடிக்கடி விபத்துகள்பற்றிய செய்திகளைக் கேட்டுக்கொண்டுதானே இருக்கிறோம்.

அன்னுப்பாட்டி—ஓமடி மோனே. போனகிழமை நீர்மூழ்கிக்கப்பலில் போன 56பேர் ஒரேயடியாய்க் குளோசாய்ப்போனுங்களாமெண்டு இவர் சொன்னூரே.

தங்கம் மாமி— இதெல்லாம் நாங்கள் எப்போதும் மரணத்துக்கு ஆயத்தமாயிருக்கவேண்டுமென்று தானே நினைப்பூட்டுகின்றன. அதுவும் இந்தத் தபசுகாலத்தில் நாங்கள் யேசுநாதரின் திருப்பாடுகளைச் சிந்தித்து எங்களை அடுத்த உலகத்துக்கு தயாராய் வைத்திருக்க இதுபோன்ற செய்திகள்தானே தூண்டிவிடுகின்றன.

ரஞ்சிதம் — நல்லாயச் சொனனீர்கள். யேசுநாதரின் பாடுகளைப்பற்றி இந்தப் பெரியவாரத்தில் தியானிக்கப்போகின்ற தருணத்தில் அவரது திருப்பாடுகள் இடம்பெற்ற புனிதமான தலங்களிலெல்லாம் அமைதியின்மையும் கெடுபிடிப்போரும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றனவே. அதை நினைக்கவல்லவோ மனசு வேதனைகொள்கிறது.

மங்களம் ஆசிரியை—யேசு பிறந்த நாட்டிலே போர். அமைதியை அன்பை போதித்த அண்ணல்வாழ்ந்த தலத்திலே கலகங்கள். என்னே காலத்தின் கோலம்.

அன் னுப்பாட்டி— ஏன் பிள்ளை. எங்களாண்டவர் பிறந்து வளர்ந்த, பாடுபட்ட இடங்களெல்லாம் இப்பவும் அதேபோலத்தான் இருக்குமா?

ஜெயா — போனகிழமை காவலனில் அப்பங்கள் பலுகியபூமி என்றதலைப்பில் யேசுநாதர் ஐந்து அப்பங்களைக்கொண்டு ஐயாயிரம் பேருக்குமேல் அமுதளித்தது பற்றிய புதுமைநடந்த இடம்பற்றிபோட்டிருந்தார்களே. அந்த இடங்களெல்லாம் இல்லாமல் மறைந்தா போகும்?

மங்களம் ஆசிரியை—யேசு பெருமானது சடலத்தை போர்த்தி அடக்கம் செய்யப்பட்டபரிவட்டத்துணிபற்றி அடிக்கடி செய்திகள் வந்துகொண்டிருக்கின்றனவே. இந்தப் பரிவட்டத்துணியிலிருந்து யேசு பெருமானின் உடல் அமைப்பையும் அவரது திருப்பாடுகளின் கொடூரத்தையும்பற்றி விஞ்ஞானிகள் பலசுவையான தகவல்களை வெளியிட்டிருக்கிறார்களே.

தங்கம்மாமி — இந்தப்பரிவட்டத்துணியின் உண்மைத்துவத்தை எதிர்க்கும் கட்சி ஒன்றும் ஆணித்தரமாகச் செயல்பட்டுவருகிறதே.

ரஞ்சிதம்—திருச்சபை உள்ளவரைக்கும் எதிர்ப்புகளும் இருந்துகொண்டேயிருக்குமென்று எங்கள் ஞானஒடுக்கப் பிரசங்கியார் இரண்டு கிழமைக்குமுன்பு சொன்னூரே. சாத்தான் சும்மாவா இருப்பான்? திருச்சபை வளர வளர அவனும் செப்படிவித்தை காட்டிக்கொண்டுதான் இருப்பான்.

மங்களம் ஆசிரியை—நல்லாய்ச்சொன்னுய் பிள்ளை. எதிர்ப்புகளைக்கண்டு பயந்து எங்கள் விசுவாசத்தைக் கைவிடுதல் தகாது. எங்கள் விசுவாசத்தைச் சோதிக்கவே அடிக்கடி இப்படிச் சலசலப்புகள் வருகின்றன.

ஜெயா — பெரியவியாழன்று யேசுநாதர் மரணவஸ்தைப்பட்ட ஜெத்சமேனித்தோட்டம் இப்போதும் அந்தப்படியே இருக்குமா?

தங்கம் மாமி — இந்தத் தோட்டம் ஒலிவேத்து மலையடிவாரத்தில் இருக்கிறதாம். ஒலிவமரங்களைக் கொண்ட தோட்டமானபடியால் மலைக்கும் ஒலிவேத்து என்று பெயர்வந்ததாம். ஜெத்சமேனி என்றால் ஒலிவ எண்ணெய் தயாரிக்கும் இடம் என்பது கருத்து. ஒலிவமரங்களை யாராவது வெட்டியெறிந்தால் அல்லாது மற்றப்படி அவைகள் இறப்பதில்லையாம். மேற்பகுதிவயதுமுதிர்ந்து பட்டுக்கொண்டேபோக கீழிருந்து புதுத்தளிர்கள் உதயமாகுமாம். இப்போதும் அங்கே எட்டு மரங்கள் உண்டே. எனவே இந்தமரங்கள் யேசுநாதரின் காலத்திய சரித்திரத்துக்குச் சான்றுபகர்வன என்று சொல்லலாம்.

ஜெயா—மாமி நல்ல வரலாறெல்லாம் சொல்கிறீவே.

ரஞ்சிதம் — மாமியின் மிஸ்டர்தான் ஒருபெரிய லைப்பிரரியே வைத்திருக்கிறூரே. மாமி என்ன படியாமலா இருப்பா?

ஜெயா—ரீச்சர் நீங்களும் ஏதாவது சொல்லுங்களேன், ஜெருசலேம் பட்டினத்தோடு சம்பந்தப்பட்டவைகளாக.

மங்களம் ஆசிரியை—யேசுநாதருடைய தலையிலே ஒரு முண்முடியைவைத்து பரிகாசம் செய்தார்கள் அல்லவா? இந்த முண்முடி ஜெருசலேமிலிருந்து பலநாடுகளுக்கு கொண்டுபோகப்பட்டது. ஒரு அரசனுக்கு பணத்தட்டுப்பாடு உண்டானபோது நகைஅடைவு பிடிக்கும் கம்பெனியொன்றில் இந்தத் திருப்பண்டத்தை ஈடுவைத்து பெரும்பொருள் பெற்றூனும்.

அன்னுப்பாட்டி — எட பாவீ மனுசா. முண்முடிக்கா இந்த அநியாயம் செய்தான்?

ஜெயா—அப்புறம் என்ன நடந்தது ரீச்சர்?

மங்களம் ஆசிரியை—பிரான்சின் அரசராயிருந்த அர்ச். லூயிஸ் இதைக் கேட்டுக் கொதிப்படைந்தார். சில சந்நியாசிமாரை அழைத்துப் பெருமளவு பொனனும் கொடுத்து எனனவிலை கொடுத்தாவது முண்முடியை வாங்கிவருமாறு அனுப்பினர். அவ்விதமாக முண்முடி வெனிஸ்நக [illegible]

இப்போ நோட்டரி டாம் பேராலயத்தில் வைத்துப் பாதுகாக்கின்றூர்கள்.

ரஞ்சிதம்—நமதாண்டவரை சிலுவையோடுபிணைத்த ஆணிகளைப்பற்றி ஏதும் தகவல் உண்டா?

தங்கம் மாமி — யேசுவின் திருப்பாடுகளோடு சம்பந்தப்பட்ட எல்லாப் புனிதப் பொருட்களையும் தேடிக் கண்டுபிடித்த பெருமை கெலனு அரசிக்குத்தான் உரியது. இந்த அரசியின் மகன்தான் பிரசித்திபெற்ற கொன்ஸ்தந்தின் சக்கரவர்த்தி. இவரது தலையை அலங்கரித்த கிரீடத்தில் மூன்று ஆணிகளில் ஒன்றைப் பொருத்திவிட்டாள் கெலனு. ஒன்றை தனது பிறப்பிடமான ரீர் நகரத்துக்குக் கொடுத்தாள். மூன்றும் ஆணியை கொன்ஸ்தந்தின் சக்கரவர்த்தியின் குதிரையின் கடிவாளத்தில் பொருத்தினளாம்.

அன்னுப்பாட்டி— ஆண்டவரின் பாடுகளோடு சம்பந்தப்பட்ட பொருட்களுக்கு எவ்வளவு கேவலமெல்லாம் நடந்திருக்கு

ஜெயா— நமதாண்டவருக்கே எவ்வளவு அவமானங்கள் நடந்திருக்கின்றன. இதெல்லாம் ஒரு பொருட்டா?

தங்கம்மாமி — சரியாய்ச் சொன்னுயடி. கடிவாளத்தில் இந்த ஆணி இருந்தால் தன்னுடைய மகனுக்கு குதிரையால் எந்தவித துன்பமும் வராதெனஅந்த அரசி நம்பினளாம. முடியில் பதித்தபடி ஒரு ஆணியை இப்போதும் பிரான்சில் உள்ள கார்ப்பன்டைன் நகரத்தில் காணலாம். கடிவாளத்தில் பதித்த ஆணியை இத்தாலியில் மொன்சா நகரத்துத் தேவாலயத்தல் வைத்திருக்கிறூர்கள்.

ரஞ்சிதம் — வெரோணிக்கா ஆண்டவரின் திருமுகத்தை துடைக்க உபயோகித்த துணியைப்பற்றி ஏதாவது சொல்லக்கூடுமா?

மங்களம் ஆசிரியை— வெரோணிக்காவின் வீரத்துவமிக்க செயலைப்பறைசாற்றிக் கொண்டிருக்கும் அந்தத் துணியில் யேசுவின் திருமுகத்தின் சாயல் பதிந்திருப்பது உங்களுக்குத் தெரியுந்தானே. அது ரோமாபுரியில் இராயப்பர் பேராலயத்தில உள்ளது.

தங்கம் மாமி—யேசுவைச் சிலுவையில் வைத்து ஈட்டியால் ஒருவன் குத்தினன் அல்லவா? இந்த ஈட்டியை சிலுவைப்போரின் எதிரிகள் பறித்துக்கொண்டுபோய்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)



## மகளிர் மன்றம்

அன்புடை நேயர்களே! ........... அஞ்சலி! ...........

கல்வாரி மலையில், சிலுவையில், அகோர வெய்யிலில், மூன்று ஆணிகளில் மரண அவஸ்தையுறுகின்றூர் திவ்விய யேசு. சிலுவையடியில் மனவேதனையில் துடிக்கின்றுள் அன்னைமரி. "என் துயருக்ீடானதோர் துயருண்டோ உலகில்" எனப் புலம்புகின்றுள். அவளுக்கு ஆறுதல் செய்வார் யாருமில்லை. அவளை நேசித்து, அவளுக்கு ஆவன செய்து, அன்பாகப் பராமரித்துவந்த சூசைமுனிவர் இன்று அவள் அருகிலில்லை. அவள் பேணிக்காத்த ஏகமைந்தனே பாடுகளின் மத்தியில், தனிமையில் தவிக்கின்றுள் அவள் கண்ணீரைத் துடைப்பார் யார்?........

இருந்தும் இரட்சணிய பலியில் உடன் இரட்சகியாக மனதைக் கனடிமாக்கிக்கொண்டு அங்கே நிற்கின்றுள். தன் உதிரத்தின் கனியை, தன் மாம்சத்தின் துடிப்பை, தன் ஏகசுதனையே மானிடராகிய எமக்காகப் பலிப் பொருளாக்குகிறுன்ளென்றுல் அவள் எம்மேல் கொண்டுள்ள அன்பு எத்தகையது? ........

இவ்வியாகுல அன்னைக்கு நாம் யாது கைம்மாறு செய்வோம். எமது பாவங்கட்காகக் கண்ணீர் சிந்துவோம். நல்லவர்களாக வாழ உறுதிபூணுவோம். உறுதிபூண்டுவிட்டால் போதுமா! ........ இன்றே செயலில் இறங்கி நல்வாழ்வை ஆரம்பிப்போம். இவ்வித நல்வாழ்வினுல் சிலுவையில் தொங்கும் யேசுவுக்கு ஆறுதலளிப்பவர்களாவோம். வியாகுலத்தாயின் கண்ணீரைத் துடைத்தவர்களாவோம். மனுக்குலத்தின் இரட்சணிய பலியில் நாமும் பேறு பெற்றவர்களாவோம். உயிர்த்த யேசுவுடன் உண்மையான இன்பங் கொள்வோம்.

— ரோஜா.

## எல்லாம் எனக்காக!

எல்லாம் எனக்காக ஏற்றுநீ இறுதியில்
கொல்லவும் நின்னைக் கொடுத்தனை கோடில்!
பொல்லா என்பாவம் போக்க உயிர்ஈந்த
எல்லையிலா உன்அன்புக்கு இணையேது அய்யா?

காறி உமிழ்ந்து இருகன் னங்களிலும்
மாறிமாறி அறைந்த போதிலும் மறுமொழி
கூறினை இல்லை; அவர்கொடு மைக்குப் பதிலாய்
ஊறினை இரக்கம் உள்ளத்தில் அய்யா!

கற்றூணிற் கட்டி யுனைக் கசைகளால்
முறமுமுன் உடல்கிழிய மொத்திய போதிலும்
சற்றுமொரு வார்த்தை சாற்று எங்கள்
குற்றத்திற்காக அதைக் கொண்டனையோ அய்யா?

முள்முடி தரித்து மூன்றுகால் இருக்கையில்
தள்ளியுனை இருத்தி தடியினைத் தந்து
'கொள்எங்கள் கொற்றவா' என்று அவர்
எள்ளிய போதுமதை ஏற்றனையோ அய்யா?

'அய்யனே! இவர் பாவம் அறியாமற்
செய்கிறூர் பொறுத்தருளும்' என்று முறை
செய்தனை பிதாவிடம்; சீவன்பிரி வேளையிலும்
பெய்தனை அன்புப்பெரு வெள்ளம் அய்யா!

படைத்தது போதாதென பாவத்தி லிருந்து
எடுத்தெமைக் கரையேற்ற வந்த உமக்குக்
கிடைத்தது இப்பரிசு கீழ் மக்களாலே
கிறிஸ்துவே எம்பாவம் பொறுத்தருளும் அய்யா!

— வாகரை வாணன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிலுவையிற் பலியாகி

# உலகினை இரட்சித்த வள்ளல்

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

டவர் பெயரால் வருபவர் ஆசிபெற்றவர்'' என வானதிர வண்ணமொழிக் கீதங்கள் பாடி இதய மலர்களைச் சொரிந்து இன்புற்று வாழ்த்தித் துதித்தனர்.

தாழ்மையின் உயர்வைக் காண்பிக்கத் தாம் தெரிந்து கொண்ட பன்னிருவரின் பாதங்களைக் கழுவிப்பணிந்து பண்புறும் தாழ்மையினை அன்புடன் அனுசரித்துவரப் பாடங்கற்பித்தார். பரலோக மன்னுவை அமைத்துத் தமது தெய்வீக வல்லமையாற் தணியாத ஆவலுடன் ஆன்ம வாழ்வுமலரத் தம்மையே உணவாகவும் தமது திருவுதிரத்தைப் பானமாகவும் வழங்கி வாழ்வளிக்கும் வள்ளல் தாமேயெனக் காண்பித்தார்.

ஏதேன் எனும் பூங்காவனத்தில் ஏவை செய்த தீவினையின் பயனாய் வந்த பாவ மாசகற்றிப் பாரதியின் வாயிலைத்திறக்க யெத்சமெனிய பூங்காவிற் கெழுந்தருளி இரட்சணிய கருமத்தை இனிதே ஆரம்பிக்க ஆவல் கொண்டார். இராயப்பர், யாகப்பர், அருளப்பரெனும் துணைவர் மூவருடன் யெத்சமெனிய பூங்காவை நோக்கிச்சென்று அயலிலே அவர்களை விட்டு நீங்கிப் பூங்காவிற்குள் நுழைந்து முழந்தாளிலிருந்து வானத்தை நோக்கித் தமது திருவிழிகளாற் பிதாவைப் பார்த்து, அரியதந்தாய்! பாடுகள் நிரம்பிய இந்தப் பாத்திரம் என்னை விட்டுப்பிரிய உமது திருவுளத்தையறிய ஆவல்கொண்டேன்; ஆயினும் உமது சித்தத்தின்படியே நிறைவுறுவதாக என்று பரிவுடன் பிரார்த்தனை புரிந்தார்.

ஆயிரம் ஆயிரம் ஈட்டிகள் போன்ற துன்பங்கள் யேசுவின் நெஞ்சத்திற் பாய்ந்ததினுல் இரத்த வெயர்வை அதிகரிக்க ஆறுதல் பெறக் கருதித் தமது நண்பர்களை நாடிவந்தார். தூக்கத்திஞல் நிறைந்திருந்த துணைவர்களை நோக்கி: ''மனமோ விவேகமுள்ளது, மாமிசமோ பெலவீனமுள்ளது, ஆதலின் விழித்திருந்து பிரார்த்தியுங்கள் என்று அரியபோதனையை அவர்களுக்கு ஊட்டினுர்.'' மீண்டும் பூங்காவிற்குள் நுழைந்து முகம் தரைபட வீழ்ந்து தமது முறையீட்டைத் தெரிவித்தார். பரமபிதா பதில் மொழியொன்றும் பகரவில்லை. மீண்டும் பிரார்த்தித்து மிகுந்த துயரமுற்று இரத்த வெயர்வை அதிகரித்துச் சிந்தியதால் சோர்வுற்று மரண அவஸ்தைப் பட்டார்.

வானிலிருந்து வந்த வானவனொருவன் அவரருகிற் சென்று இரத்தம் படிந்திருந்த மலர்முகத்தை மிருதுவான துணியினுற் துடைத்து வான்தந்தை வழங்கியுள்ள ஆறுதல் வார்த்தைகளையும் பகர்ந்து பணிந்து நின்றுன்,

பிதாவின் திருவுள்ளத்தைத் தெரிந்துகொண்டு பிரியசீடரிடம்வந்து அவர்களை அழைத்துக் கொண்டு செல்கையில், யேசுவைப் பிடிக்கவரும் திரண்டஜனக் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய யூதாஸ் பகைமனத்துடன் நகைமுகத்துடன் யேசுவின். அருகிற் சென்று குருவே வாழ்கவென்று கன்னத்தில் முத்தமிட்டான். யேசு, துரோகம் இழைத்த சீடனை அன்பனே என அழைத்து அவனுடன் உரையாடினுர். சேவகரைப் பார்த்து, ''யாரைத் தேடி வந்தீர்கள்'' எனவினுவ அவர்கள், ''நசரேனுவாகிய யேசுவைத்தேடுகிறோம்'' என்றுர்கள். ''அவர் நான்தான்'' ''நாள்தோறும் தேவாலயத்தில் உங்களோடு இருந்தேனே அப்பொழுது என்னைப் பிடிக்கவராது இப்பொழுது ஒரு கள்வனைப் போலப் பிடிக்க வருவதன் காரணமென்ன'' வெனக்கேட்டார்? மறுமொழி கூறமுடியாது மயங்கி நின்றவர்களை மலரச்செய்து மீண்டும் யாரைத் தேடிவந்தீர்கள் என வினவித் தம்மை அவர்களுக்குக் கையளித்தார்.

கயிறுகளாலும் சங்கிலிகளாலும் யேசுவின் கழுத்திலும் கரங்களிலும் கட்டி மாசற்ற செம்மறியை மனிதாபிமானமின்றி அன்னுஸ் என்பவரின் அரண்மனைக்கு இழுத்துச் சென்றனர். வஞ்சகநெஞ்சனை அன்னுஸ் அரண்மனையில் ஆண்டவரின் கமலவதனமீது கரடுநிறைந்த கையினுற் கயவனெருவன் கன்னத்தில் அறைந்தான். கயவனை கைப்பாஸ் அரண்மனையிலும் ஆணையிட்டுவினவிய வினுவிற்கு ஆண்டவர் அளித்த பதிலை அறிந்து யேசு தேவகுமாரனென்றதாற் தேவபழிகாரனுகத் தீர்ப்பளிக்கப்பட்டார்.

தங்கச்சிலைபோன்ற யேசுவை அங்கொருவன் இங்கொருவன் இழுத்து அல்லற்படுத்திக்கொண்டு சென்றனர். இரவினில், யேசுவின் கமலவதனத்திற் காறி உமிழ்ந்து துகிலினுற் கண்களை இறுகக் கட்டித் தூஷித்துச் சிரசினிற் குட்டி இரக்கமின்றி ஈனச் செயல் புரிந்து யேசுவின் திருமேனியை வாதைப்படுத்தி வருத்தினர்.

தூயவரான யேசுவைப் பிரிந்தமையாற் துயருற்ற இராயப்பரும், அருளப்பரும் ஆண்டவரைக் காண்பதற்கு அவதியுடன் சென்றனர். இரவினிற் குளிர் அதிகமாய் இருந்தமையால் இராயப்பர் குளிர்போக்க எரியும் தழலைச் சூழ இருந்தவர்களிடம் சென்று அருகிருந்தனர். குற்றேவல் புரியும் கூலிக்காரரால் இராயப்பரும் யேசுவேடுசேர்ந்தவர், கலிலேயவாசியென்று அவரைக் குறித்து விவாதித்ததால் இராயப்பர் மனம் தடுமாறி மிகப்பயந்து யேசுவை நான் கண்டதேயில்லையென்று மும்முறை மறுதலித்தார்.

கட்டிய கட்டுக்களுடன் தள்ளுண்டுபோகும் தருணத்தில் இரக்கம் நிறைந்த யேசு இராயப்பர் மீது கருணை நிறைந்த தமது திருவிழிகளை நோக்கினுர். உடனே இராயப்பர் மனம்மாறித் தான் புரிந்த குற்றங்களை நினைந்து வெளியேசென்று மிக்கவிசனமுற்றிருந்தார்.

உரோமை அதிபனுன போஞ்சியு பிலாத்துவினிடத்து யேசுவைக் கூட்டிச் சென்று, இவன் தேசத்துரோகி; சேசாருக்கு வரிப் பணம் செலுத்துவதைத் திட்டமுடன் எதிர்ப்பவன்; தன்னையே தீர்க்கதரிசி, அரசன், தேவகுமாரனெனக் கூறுகின்றுன் எனக் குற்றம் சாட்டினர். பிலாத்து விபரமாக விசாரணை செய்து யேசு குற்றமற்றவரென இதய பூர்வமாக எடுத்துரைத்தான். ஆயினும் யூதர்கள் மூர்க்கராகி யேசுவை விடுவிக்க முயல்வதைப் பலவழிகளிலும் எதிர்த்துப் பிலாத்துவையும் பயமுறுத்தி வந்தனர். பிலாத்து தனது அதிகாரத்துக்குப் பங்கமேற்படுமென்று மனம் குழைந்து கோழைத்தனமிகுந்து யேசு கலிலேயவாசியெனக் கூறிய கலகக்காரரின் கூற்றைக் கருத்தினிற் கொண்டு கலிலேய அரசனுன ஏரோதனிடம் யேசுவைக் கூட்டிச்செல்வதற்கு அனுமதி அளித்தான்.

ஈன இன்பத்தில் மிதந்திருந்த ஏரோதன் யேசுவைக் கண்டதும் அவருடன் பேசவும், புதுமைகளைக் காணவும், ஆவல்கொண்டவனுய் யேசுவைப் பார்த்து வினுவிய கேள்விகளுக்கு யேசு பதில் ஒன்றும் பகராது மௌனமாய் நின்றமையால் ஏரோதன் கோபமடைந்து யேசுவைப் பைத்தியக்காரனென வருணித்து வெள்ளைச் சட்டையை அடையாளமாக அணிவித்து அனுப்பிவைத்தான்.

மாஸிடரின் இரத்தத்தைச் சுவைபார்த்த புலி அந்த இரத்தத்தின்மேற் பித்துப் பிடித்துத் திரிவதுபோலும் வஞ்சகரின் நிலையை உள்ளம் உணராத கோழைப் பிலாத்து யேசுவைக் கற்றூணிற் கட்டிக்கடூரமாய் அடிக்க உத்தரவிட்டான். சேவகர் யேசுவைக் கசைகளாலும் சாட்டைகளாலும் கடூரமாய் அடித்தபோது மாமிசத் துணிக்கைகள் கொத்துக் கொத்தாய்ச் சிதறின. திருமேனியினின்றும் இரத்தம் தாரை தாரையாய் ஓடின. தரையெங்கும் குருதிவெள்ளமாயின. வானத்தை விண்மீன்களாலும், பூமியைப் பலநிறப் பூக்களாலும் வருணித்தமைத்த இறைவன் இங்கு ஆடையின்றி அவமானமாக நேர்ந்ததென்ன ?

செங்கோலாக ஒரு நாணற் தண்டை யேசுவின் கரத்தினிற் செலுத்தினர். முள்ளுக்கள் நிறைந்த செடியை முடியாக வளைத்துச் சிரசினிற் பொருத்திக்கண், காதுமட்டாக இறங்க வருத்தினர்.

பிலாத்து யேசுவின்மீது சிறிது இரக்கங் காண்பித்துப் பரிதாப சிந்தையொடு பார்வைக்கு இவன் மனிதனைப் போலில்லையே எனக் காண்பிக்க முற்றவெளியில் யேசுவை நிறுத்தி அவர் திருமுதுகைக் காண்பித்து இதோ மனிதனென மனமிரங்கிக் கூறினுன்.

யேசுவை யூதர்கள் சிலுவையில் அறையும் வண்ணம் மூர்க்க குணத்துடன் முறையிடுவதைப் பிலாத்து அறிந்தவனுயினும், தேவபழிக்குப் பயந்து தீர்வையிட அஞ்சித்தான் குற்றமற்றவனெனக் காண்பிக்கத் தண்ணீரைக் கொண்டு இந்த நீதிமானின் இரத்தத்தில் எனக்குப் பங்கில்லை; பழிபாவமும் என்மேல் இல்லையென்று கைகழுவிவிட்டான்.

யூதர்களின் பாஸ்குத் திருவிழா வழக்கப்படியும் குற்றவாளியாயிருந்த பரபாஸ் என்பவனையே விடுதலையாக்கி யேசுவைக் குற்றவாளியாகவே வைத்திருக்க யூதர் வகை செய்திருந்தனர். மூர்க்க குணமுடைய யூதர்களின் முறையீட்டுக்குப் பதிலளித்துக் குற்றமற்றவரெனக்கருதும் யேசுவை விடுதலை செய்யாது கோழைத்தனமுள்ள பிலாத்துப் பதவிமோகம் பிடித்து நீதியினின்றும் வழுவி அநீதியாக யேசு சிலுவையில் மரிக்க வேண்டுமென்று மரனத் தீர்வையிட்டான்.

சேவகர்கள் யேசுவுக்கு ஆடைகளை அணிவித்து உருவாக்கியிருந்த சிலுவையண்டை அழைத்துச் சென்றனர். மனித இரட்சணியத்தின் பாபெருஞ் சின்னமாக விளங்கிய சிலுவையை அன்புடன் முத்திசெய்து தமது திருத்தோளுடன் அணைத்துக் கொண்டார்.

கசைபடிகளாலும் முள்முடியாலும் வசைமொழிகளாலும் ஈனச்செயல்களாலும் வருந்தி நொந்த யேசுவின் திருத்தோளின்மீது அசைவில்லா இரும்பு மனமுடைய ஈன யூதர் பாரம்மிகுந்த சிலுவையைச் சுமத்தி இரக்கமின்றி வதைப்பதைச் சிந்தையில் உணர்வுடைய எந்த மானிடரும் பார்த்துச் சகிப்பாரா ?

கரடு முரடான முட்கள் நிறைந்த பாறையில் மூன்று முறை யேசு முகம் தரையடிபடவீழ்ந்து எழுந்து கல்வாரி மலையின் உச்சியை அடைந்தார். இரக்கமில்லாத சேவகர் அவரது ஆடைகளைக் கழற்றிச் சிலுவையிற் கிருபைநிறைந்த இரட்சகரை அறைந்து இருகள்வர் நடுவில் உயர்த்தினுர்கள், உலகுக்கு ஒளிதரும் சுடர்விளக்கு மலையில் ஏற்றப்பட்டது.

ஈற்றில், பாவிகளை நினைந்தே பரிவுடன் பரமபிதாவைப் பிரார்த்தித்துத் தமது அருமையான மாதாவிடம் மனுமக்களை ஒப்படைத்துப் பிதாவை நோக்கிக் கூவியழைத்துச் சிலுவையிலே பலியாகி உலகினை மீட்டு இரட்சித்தார். சிலுவையிலே வெற்றிகண்டார் எங்கள் அருமைக் கிறீஸ்து யேசு. இவரே மூன்றும்நாள் ஜெயசீலராய் மகிமைப் பிரதாபத்துடன் உயிர்த்தெழுந்தார்.

## பூங்காவனத்தில் இயேசு

யெத்சமெனித் தோட்டமதில் யேசுநாதர் தானிருந்தார்
மெத்தவுமே வருத்தமாக மேதினியில் முழந்தாளிட்டார்
பெற்றெடுத்த தாயுமிலாப் பேதகர்கள் விட்டவேளை
இத்தலத்தில் உதவுவார் எவருமிலர் இவருக்கே.

* * *

என்னரிய தந்தையரே என்றுமேதான் வேண்டினரே
பன்னரிய பாடுகளும் நானுமேதான் படப்போறேன்
இன்னலையே நினைக்கையிலே இத்தலத்தில் இரத்தமானேன்
உன்னுடைய சித்தமாயின் பாடுகளை நீக்கிடுமே.

* * *

தேர்ந்தெடுத்த மூவருமே தேசமதில் தூங்குகையில்
சோர்ந்திருந்த அவரிடமே யேசுவுமே சென்றுஅங்கு
சேர்ந்திருந்து என்னுடனே ஒருமணியும் செபிக்கவும்தான்
மார்ந்தருமே உம்மாலே மூடியாதோ என்றனரே.

* * *

சொன்னமொழி கேட்டுஅவர் எழுந்திருந்த வேளைதனில்
பின்னுமவர் சொற்பதூரம் சென்றுஅங்கே முழந்தாளில்
இன்னுமேதான் தன்செபத்தைத் தந்தையர்க்குக்
கூறியங்கே
அன்னவரின் மொழியதனை ஆவலுடன் காத்திருந்தார்.

* * *

சம்மனசும் வந்தனனே சற்றுநேர மானபின்பு
இம்மையிலே அவரிரத்தம் தானும் துடைத்தனனே
செம்மையுறு மொழிகளினுல் அவர்மனதைத் தேற்றியங்கே
இம்மானிலம் பாடுகளை ஏற்கவுமே செய்தனனே.

— பாக்கியம்,

### நன்றித்துதி

பாலகயேசு, பரிசுத்த புதுமைமாதா, புனித சூசையப்பர் இவர்களிடம் என் குழந்தையையிட்டுக் கேட்ட காரியங்கள் கிடைக்கப்பெற்றேன். இவர்களின் நாமம் புகழப்படுவதாக. பிரசுரிக்கத் தாமதித்தமைக்காக இவர்களிடம் மன்னிப்புக் கோரிநிற்கிறேன். ஓர் அடியாள்

காவலனுக்கு கதைகள், கவிதைகள், கட்டுரைகள் அனுப்பவேண்டிய விலாசம் :

ஆசிரியர். 'காவலன்',
மேற்றிராசன இல்லம்,
த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாம் முற்றிற்று

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் கேவலமான அடிமை!! இதுவே அமைதியில்சஞ்சலம்! ஆரோக்கியத்தில் தீராத நோய்!! அழகில் அவ இலட்சணம்!!! நாகரிகத்தில் அநாகரிகம்!!!!

### எமை ஆட்கொண்டவர் தேவன்

கிறிஸ்து முற்றுப்புள்ளி போட்டார் உலகபோக்குக்கு! அவரால் சீவிப்பவனுக்குக் காலம் என்னும் பிரமாணம இனி இலலை. அவனுக்கு நேரம் நின்றுவிட்டது. கிறிஸ்துவில் சீவிப்பவன் கிறிஸ்துவால் சீவிக்கிறான். அவர் நித்தியமானவர். அவர் உலகைக் கடந்தவர். அவரில் விசுவாசம் கொண்டவருள்ளே அவர் வந்துவிட்டார். எனவே அவரை ஆண்டவர் என்று அழைக்கிறோம். இவ்வாறு ஆட்கொள்ளப்பட்டவன் கிறிஸ்துவின் ஆவியாலே உந்தப்படுகிறான். உலகம் அவனை ஆள்வதிலலை. எப்படி கொந்தளிக்கும் சலப்பிரளயத்திலிருந்து நோவாவின் பேழை காப்பாற்றப்பட்டதோ அதேபோல் காலத்தினதும் உலகத்தினதும் வரம்பிற்குள் அகப்பட்டு உலகப்போக்கால் அழிந்துபோகும் மனுக்குலத்லை உலக அடிமைத்தனத்திலிருந்து காப்பாற்றினார் கிறிஸ்து. அவர் மாமிசத்திற்கும் சுயநலத்திற்கும் அப்பாலானவர். தேவவார்த்தையானவர் மாமிசமான போதே மனிதன் சுயநல அடிமைத்தனத்திலிருந்து மீட்கப்பட்டு அவரின் அன்பின் ஆட்சிக்குள்ளானன். அவரில் விசுவாசங்கொள்வதே அவனின் உன்னத இலட்சியம். கல்வாரியில் பாவத்தால் மனிதனுக்குவந்த மரணம்தோல்வியுற்றது. நித்தியசீவியம் எல்லோருக்கும் அளிக்கப்பட்டது. எனவே நித்திய சீவியமான கிறிஸ்து "எல்லாம் முற்றிற்று" என்றார். இனிக்கிறிஸ்தவனுக்கு பிறப்பு இல்லை. அவன் தூயஆவியால் புதுப்பிக்கப்பட்டுவிட்டான். கிறிஸ்துவில் சம்பூரணத்துவம் அடைந்துவிட்டான் மனிதன். இனி நேரமே தேவையில்லை. அவனுக்கு நேரம் நின்றுவிட்டது.

### யேசு மறுரூபமானர்

யேசு மறுரூபமான காட்சியைக் கண்டார்கள் புனித பேதுருவு, யாகப்பரும், அருளப்பரும். அக்காட்சி அவர்களைப் பேரின்பத்தில் மூழ்கச்செய்தது. "ஆண்டவரே நாம் இங்கேயே மூன்று கூடாரங்களை அமைப்போம்" என்றார் பரவசமான புனித பேதுரு. உலகிலிருந்தபோதும் நித்திய இலட்சியமான கடவுளுக்காகச் சீவித்த புனிதர்கள் தங்கள் உலக சீவியத்திற்கு முற்றுப்புள்ளி போட்டுவிட்டனர். அவர்களுக்கு "எல்லாம் முற்றிற்று" எனவே "இங்கேயே கூடாரங்கள் அமைப்போம்" என்றார் புனித பேதுரு. ஒரு புகையிரதமானது ஒரு ஸ்தானத்தை அடைந்ததும் மறுஸ்தானத்தை நோக்கி ஓடுகிறது. ஏனெனில் அதன் இலட்சியத்தை அது இன்னும் அடையவில்லை. புனித அகுஸ்தீனர் கூறுமாப்போல் கடவுளில் சாந்தியடையாதவன் சமாதானத்தைக் காணமாட்டான். அவன் பயணம் முடிவடையாதிருக்கிறது ஆனல் கடவுளில நிலைத்திருப்பவனே நித்தியமாய் அவரின் பரமானந்தத்தில் நிலைத்திருக்கிறான். எல்லாம் கடந்தவர் நமமை ஆட்கொண்டபின் நமக்குக் கடக்க ஒன்றுமிலலை. எல்லாம் கடந்தவரே கடவுள். அவரே நம்மை ஆட்கொள்ள முடியும். ஏனெனில் அவரே சமாதானமானவர். அவரே அதை அளிக்கவும் முடியும எப்படிச் சமாதானம் அடையாத உலகம் அதை மனிதனுக்கு அளிக்க முடியும். எனவே கடவுளின் மக்களை அடிமைகள் என்று அழைபாது சுதந்தரம் பெற்ற சுவீகாரப் பிள்ளைகளென்று அழைக்கிறோம். ஏனெனில் உலக அடிமைத்தனத்திலிருந்து அவர்கள் மீட்கப்பட்டனர். அவர்கள் கடவுளின் பரிசுத்ததனத்தை அவரின் ஏககுமாரனின் குருத்துவத்தாலும் அவரின் விலைமதிக்கப்படாத இரத்தத்தாலும்பெற்று எல்லோரும் எக்காலமும் அவருடைய ஆவியால் நித்திய ஐக்கியம் பெற்றிருப்பதால் புனித இராயப்பர், "நீங்களோ இருளில் நின்று உங்களைத் தனது ஆச்சரியமான ஒளிக்கு அழைத்தவருடைய வல்லபச் செய்கைகளைப் பிரசித்தமாக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட வம்சமும், இராசரீக ஆசிரியக் கூட்டமும் பரிசுத்த சனமும் அவருடைய சம்பாத்திய பிரசைகளுமா யிருக்கிறீர்கள்" என்கிறார்.

எனவே, புனித சின்னப்பர் கூறுமாப்போல் சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவை என்றும் நாம் தரித்து அவரின் நிலையான சமாதனத்தைப் பெறுவோமாக.

# சீவியம் அளிக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுகிறது. இது காலத்தால் அதன் கோலத்தால் அழிவுபடலாம் ஆனுல் எம் வாழ்வில் ஏற்படும் சிலுவைகள் இதனை எமக்கு எப்போதுமே ஞாபகமூட்டிக்கொண்டிருக்கும். ஓ! ஜீவியமளித்த சிலுவையே! உலக இரட்சணியத்தைத் தந்த உன்னத சின்னமே! எம்மைப் புனிதப்படுத்துவாய்!!

சிலுவையில் சிந்தையிருந்தால் சிந்தனை தெளிவடையும்; ஜீவியம் சிரடையும். சிலுவையின்றி வாழ்விலலை; சிலுவையே ஜெயமளிக்கும். சிலுவையின்றிக் கிரீடமில்லை.

எம் கிறிஸ்தவ வாழ்வின் ஞாபகச்சின்னங்களாகத் திகழும் நற்கருணை, பலி, சிலுவை என்பவற்றைச் சிந்திப்போம். ஆனுல் இவை கிறிஸ்துவின் ஞாபகச் சின்னங்களாக மட்டுமல்ல, எமது வாழ்க்கையின் வழிகாட்டும் சின்னங்களாகவும் அமைய வேண்டும். இவ்விதமாய் எம் வாழ்வு அமையுமானுல், இந்த ஈஸ்டர் திருநாளில் உயிர்த்த கிறிஸ்துவுடன் நாமும் ஒரு புது வாழ்க்கைக்கு மட்டுமல்ல நித்தியவாழ்விற்கும்பங்காளிகளாவோம்.

# யோண் ரி. லினகான், யே. ச. சுவாமி அவர்களின் மறைவு

காலை 9.30 மணி எங்கும் சூரிய வெளிச்சம். பாடசாலைச் சிறுர்கள் பாடங்களைப் படித்துக்கொண்டிருக்கும் நேரம். பங்குனித் திங்கள் 11 ஆம் நாள். மோட்டார்வாகனத்தில் போய்க்கொண்டிருந்த லினகான்சுவாமி சடுதியாக மரிக்கின்றார். மோட்டார் வாகனத்திற்கு விபத்து நடக்கவில்லை ஆனுல் அமைதியாக அவர் தன் ஆன்மாவை ஆண்டவருக்கு அர்ப்பணிக்கிறார்.

இவர் யார்? என்ற கேள்வி மக்கள் மனதில் எழுகின்றது, திரிகோணமலைப்பங்கைச் சேர்ந்த யாவரும் இவரை அறிவர். 1933ஆம் ஆண்டு ஒரு மெலிந்தஉருவம் இலங்கையில் கால் வைக்கின்றது. இலங்கையைப்பற்றி இலங்கை மக்களைப்பற்றி அவ்வளவு அவர் அறியவில்லை அந்நேரம். மிகவும் ஆர்வம் நிறைந்தவராக அவர் காணப்படுகின்றார். மக்கள்மேல் உள்ள அன்பு அவரை ஆட்கொள்ளுகின்றது.

யோண் ரி. லினகான் 1898 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்தார். தன் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு இவர் ஓரிரு ஆண்டுகள் வேலைசெய்து வந்தார். அந்நேரம் ஆண்டவனின் அழைத்தல் இவரை ஆட்கொண்டது அதற்குத் தன் செவிமடுத்து, 1925-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 8-ந்தேதி யேசு சபையிற் சேர்ந்து கொண்டார். நவசந்நியாசமும், மற்றும் படிப்புகளும் முடித்து 1937-ம் ஆண்டு ஆடிமாதம் 4-ந்தேதி குருபதவிக்கு உயர்த்தப்பட்டார். 1940-ம் ஆண்டு மார்கழி 8-ம் நாளில் தனது கடைசிவாக்குறுதியையும் எடுத்துக்கொண்டார்.

லினகான் சுவாமி பல பெரிய பதவிகளிலிருந்து தொண்டு செய்தார். திருகோணமலையில் யேசு சபைத் தலைவராகவும், திருகோணமலை மேற்றிராணியார் இறந்தபோது அம்மேற்றிராசனப் பரிபாலிப்பாளராகவும் (Administration), திருகோணமலைப் புனித சூசையப்பர் கல்லூரி அதிபராகவும் கடமையாற்றினார்.

எல்லோருக்கும் மகிழ்ச்சியூட்டுவதே இவரின் அவா. சிறுவராயினும்சரி, வளர்ந்தோராயினும்சரி எல்லோரையும் இவர் நேசித்தார். அவர்களும் அவரை நேசித்தனர்.

12-ந்தேதி பிரேத அடக்கத்தின்போது இது கண்கூடாகக் காணப்பட்டது. பள்ளிச்சிறுர்களும், பழைய மாணவர்களும் அவரது பிரேதத்தைச் சூழ்ந்து நின்றனர். மரியநாயகிகல்லூரி மாணவிகள் வாத்திய இசைகளினுல் தங்கள் துன்பத்தைத் தெரிவித்தனர். பக்தர்கள் தம் செபத்தால் அவருக்காக வேண்டினர். குருமரபினர் இருபுறமும் அணிவகுத்துச் செபமாலை ஓதினர். சாரணர் தம் உடையுடன் காட்சி தந்து தம் துயரைக் காட்டினர்.

லினகான் சுவாமி இறந்துவிட்டார். இல்லை. அவர் தன் புதுவாழ்வைத் தன் நித்திய வாழ்வைப் பெற்றுக் கொண்டார். உலகில் அவர் வாழ்ந்தபோது மக்களை மகிழ்வித்தது போல, இன்னும் அவர்களை மகிழ்விக்க ஆவலாயிருக்கிறார். இனி நாம் அவரைச் சரீரக் கண்களாற் காணுவிட்டாலும் அவரிடம் சென்று மன்றுடுவோம். அவரும் எங்கள் மன்றுட்டைக் கேட்பார் என்பதில் ஐயமில்லை.

பாக்கியம்.

# பிரகாசம் பாக்கியநாதரின் மறைவு

" மத்தியூஸ் ஸ்ரூடியோ " என்ற படப்பிடிப்பு நிலையத்தின் மூலம் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல மக்களாலும் கடந்த 29 ஆண்டுகளுக்கு மேல் நன்கறியப்பட்டுவந்த அதன் சொந்தக்காரரான திரு. பிரகாசம் பாக்கியநாதர் 4-3-70-ல் மரணத்திரையுள் மறையலாயினர்.

இவர் 1-11-1921-ல் விடத்தல்தீவு எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். சித்திரக்கலையிலுள்ள ஆர்வத்தினுல் 7-ம் வகுப்புடன் படிப்பை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணத்திலுள்ள சித்திரக்கலைஞர் திரு. மாணிக்கத்தம்பி அவர்களிடம் படப்பிடிப்புப் பயிற்சிபெற்று 1948-ம் ஆண்டிலிருந்து மன்னார்ப்பட்டினத்தில் ஒரு படப்பிடிப்பு நிலயத்தைத் திறந்து இனிமையான பேச்சினுலும் கனிமையான போக்கினுலும், சாந்தமான நடையினுலும், ஒழுக்கமான வாழ்வினுலும், கடவுட்பக்தியினுலும் எவரையும் மனநோகப்பண்ணுத பேச்சினுலும் மன்னார் மாவட்ட மக்களின் அபிமானத்தைப் பெற்றிருந்தார்.

இவருடைய பிரேதச்சடங்கானது பெருந்தொகையான இனசன நண்பர்கள் மத்தியில் 5-3-70 பி. ப. 5 மணிக்கு மன்னார் சேமக்காலையில் நடைபெறலாயிற்று. தனது அருமைக்கணவரை இழந்து ஆருத்துயரில் மூழ்கியிருக்கும் பாக்கியவதி அம்மையாரோடும், மக்கள் சுற்றத்தாரோடும் எமது அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவருடைய ஆன்மா சாந்தி அடைவதாக.

எம். டி. ஆர்.

---

**பார்பரம்மா மனுவேற்பிள்ளை**

அவர்களின்

## 1-ம் வருட மரண ஞாபகம்

பிறப்பு: 25—1—1902 இறப்பு: 31—3—1969

" சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்."

எனது அன்பு மனைவியும், எங்கள் அருமைத் தாயாரும், எமது மாமியாரும், பேத்தியாருமாகிய பார்பரம்மா மனுவேற்பிள்ளை இறைவனடிசேர்ந்த 1ஆம் வருடம் இம்மாதம் 31-ந்தேதி நிறைவுறுவதால் அன்றுகாலை சில்லாலை பரி. ஆரோக்கியமாதா ஆலயத்தில் திவ்விய பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் அனைவரும் அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
சில்லாலை.

33/70.

---

### நன்றியறிந்த தோத்திரம்

நற்கருணை அன்பரின் அனுக்கிரகத்தாலும், திருஇருதய ஆண்டவர் திருச்சிலுவைநாதருடைய இரக்கத்தாலும், பரிசுத்த லூர்துநாயகி, திருஇருதயத்தாய், சதாசகாயமாதாவுடைய மன்றுட்டாலும், நான் கேட்டுக்கொண்டபடி என்வியாதி முற்றிலும் நீங்கி சுகப்பிரசவம் அடைந்தேன். நேர்த்தியின்படி இதைப் பிரசுரிக்கிறேன்.

ஓர் அடியாள்.

# பொன்னுச்சிப் பெத்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டலும் பண்ணத்துவங்கினர். பெத்தாச்சியின் பின்னல் நின்றுகொண்டு நக்கலும் நலைகப்பும் செய்தனர். பெத்தாச்சிக்குக் கண் புகைச்சலோடு தோட்டமும் கொஞ்சம் தொலையில். இதனுல் இளமட்டங்கள் பண்ணும் கேலிப்பேச்சுகள் ஒன்றுமே கேட்கவில்லை. வஞ்சகமில்லாக் கிழவிக்கு இவர்கள் யாபேரும் சிரிக்கும் மர்மம் புரியாமல் தானும் கூடச்சேர்ந்து சிரித்துக்கொண்டு கோவிலுக்குச் சென்றுள். பூசை முடியும்வரை பெத்தாச்சியின் கோலம் கிறீஸ்துநாதரைப் போலவே காட்சியளித்தது. பின்பு நடைபெற்ற திருப்பாதையிலும் பெத்தாச்சி பங்குகொண்டாள் திருப்பாதையின்போது பொன்னுச்சியைப் போன்று அநேக கிழடுகள் குருசோடும் முள்முடியோடும் வந்திருந்தனர். இவர்களும் பெத்தாச்சியின் கூட்டத்தைச் சேர்ந்த, துப்பல்சிரட்டைக் கொம்பனியார்கள். பெரிய வெள்ளிக்கிழமைச் சடங்குகள் யாவும் முடிவடைந்ததும் பெத்தாச்சி வீட்டுக்கேகினுள். வீடு சென்றதும் தனது பேரப்பிள்ளைகளைக் கூப்பிட்டு "இன்றைக்கு நமது ஆண்டவர் செத்துப்போனர்; ஒருவரும் பாட்டுப்படிக்கக் கூடாது; கடலைகச்சான் தின்னக்கூடாது. எல்லோரும் சேர்ந்து ஒப்பாரி புலம்பல் படிக்கவேண்டுமென்று கட்டளையிட்டாள். அன்று நாள்முழுவதும் கிழவி ஒன்றுமே உட்கொள்ளவில்லை. இரவோடு இரவாக கொஞ்சம் உப்புக்கஞ்சி குடித்தாள். இத்தோடு பொன்னுச்சிப் பெத்தாச்சியின் நோன்பு முடிவடைந்தது. பரிசுத்தவாரமும் ஓரளவு முற்றுப்பெற்றது. பொன்னுச்சிப் பெத்தாச்சி அனுசரித்த தபசுகாலக் கடமைகளில் ஒருசிறு பங்காவது நாம் அனுசரிக்கப் பிரயாசை எடுப்போமாக.

---

**திரு. அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை**

(சுங்க இலாகா, தலைமன்னார்)

அவர்களின்

## 2-வது வருட மரண ஞாபகம்

பிறப்பு: 17—5—1929. இறப்பு: 6—4—1968.

எனது அன்புமிக்க பத்தாவும் எங்கள் நேசத் தந்தையும் மாமனருமான அந்தோனிப்பிள்ளை மரியாம்பிள்ளை இம்மண்ணுலகை நீத்த இரண்டாம் வருடம் இம் மாதம் 6-ந்திகதி(6-4-70)பூர்த்திஅடைகிறபடியால் அவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக நெடுந்தீவு அர்ச். யுவானியார் ஆலயத்தில் ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், கிறீஸ்தவர்கள் அனைவரும் இவரின் ஆன்மசாந்திக்காக வேண்டிக் கொள்ளும்படி தயவாகவேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்

மனைவி: ம. மரியம்மா. மக்கள்: மெரினு கமலி ராசேஸ்வரி, டெய்சி சீலா ராசேஸ்வரி, மொனிக்கா கரோலின். மற்றும் சகோதரிகள் மருமக்கள், இனசனர்.

35|70.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர் தரும் உணவு

மண்ணுலகில் மனிதன் உயிர் வாழ்வதற்கு உணவு தேவை. இதற்காகவே இரவென்றும் பகலென்றும் பாராது இன்னல்கள் பலஏற்று உழைக்கின்றனர். மண்வெட்டி பிடித்து, நெற்றி வியர்வை நிலத்தில் சிந்திப் பாடுபடுகின்றனர். காடு, மலை கடந்து, ஆறு, கடல் தாண்டிப் பொருள் தேடுகின்றனர். கண்டங்களுக்குக் கண்டம், நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் போட்டியும், பூசல்களும், பகைமையும் மலிந்து கிடப்பது எதனால்? சமுதாயத்திலே பொய்யும் களவும், சூதும் வாதும், பகையும் கொலையும், அநீதியும் நெறிகேடுகளும் நிலவிவருவது எதற்காக? எண்சாண் உடலில் ஒருசாண் வயிற்றுக்காக என்றுதான் சொல்ல வேண்டும். "பசி வந்தால் பத்தும் பறந்திடும்" என்பார்களே.

இஸ்ராயேல் மக்கள் எஜிப்தின் அடிமைத்தனத்தினின்று விடுதலை பெற்றனர். வாக்குத்தத்த நாட்டிற்கு வழி நடத்தப் பெற்றனர். பாலைவனத்தில் நாற்பது ஆண்டுகள் உருண்டோடின. உண்ண உணவின்றித் தவித்தனர். முறுமுறுத்தனர்; முறையிட்டனர் மோயீசனிடத்தில். இறைவன். "மன்னா" என்னும் அதிசய அப்பத்தினால் அவர்களை உண்பித்தார். தென்புடன் வழிநடந்தனர் (யாத். 16 -12-36).

இறைவாக்கினர் எலியாஸ் ஊரைவிட்டுத் துரத்தப்பட்டார். பாலைவனம் சென்றார். தான் சாகவேண்டும் என்று கோரினார். களைப்பின் மிகுதியால் சூரைச்செடி நிழலில் படுத்துறங்கினார். வானதூதனால் எழுந்திருந்தார். தூதன் தந்த உரொட்டியை உண்டு நீரைப்பருகினார். ஊக்கம் பெற்றார். நாற்பது இரவும் பகலும் நடந்து ஹொரேப் மலையை அடைந்தார். இறைவனின் தரிசனை பெற்றார் (3அரசர். 19—1-8).

இயேசு பிணியாளர்களுக்குச் செய்துவந்த அருங்குறி (புதுமை)களை மக்கள் அறிந்தனர். விடாது அவரைப் பின்சென்றனர். பெருங்கூட்டம் ஒன்று தம்மிடம் வருவதை அவர் கண்டார். அவர்கள் எல்லோருக்கும் உணவளிக்க விரும்பினார். ஆனால் அப்பத்தை எங்கு பெறுவது? எப்படிப் பெறுவது? அங்கு சிறுவன் ஒருவன் இருந்தான். அவனிடத்தில் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் இருந்தன. ஆகிலும் இத்தனை பேர்களுக்கு அது எம்மாத்திரம்? யேசு அப்பங்களை எடுத்தார். நன்றி கூறினார். பந்தி அமர்ந்தவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அவ்வாறே மீன்களையும் கொடுத்தார்! அப்பமோ ஐந்து. ஆண்களோ ஐயாயிரம். பெண்டிர் பிள்ளைகள் வேறு. வேண்டிய மட்டும் எல்லோரும் உண்டனர். மிச்சத்தால் பன்னிரண்டு கூடைகளும் நிரம்பின. எனவே இவ்வருங்குறி கண்டு அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

மக்கள் தம் வயிற்றை நிரப்ப அன்று வாழ்ந்தனர். இன்றும் வாழ்கின்றனர். வயிற்றுக்காக வாழ்ந்தால் மட்டும்போதுமா? மனிதனுக்கு வயிறு மட்டுமல்ல; அதிலும் உயர்ந்த ஓர் ஆன்மாவும் உண்டு. இறைவன் சாயல்பெற்றது; அழியாதது. அது வாழவேண்டும்; வளரவேண்டும். இத்தவக்காலத்திலாவது நாம் அதைத் தேடவேண்டும். தாய்த்திருச்சபை நம்மை அழைக்கின்றாள். இயேசுவின் பொன்மொழிகள் நம்மைத் தூண்டுகின்றன. உயர்ந்தது எதுவென உணர்த்துகின்றன. "மனிதன் அப்பத்தினால் மட்டுமன்று, கடவுளுடைய வாயினின்று வரும் ஒவ்வொரு சொல்லினாலும் உயிர் வாழ்கிறான்" (மத். 4-4). "ஆகவே, கடவுளின் அரசையும் அவருடைய நீதியையும் முதலில் தேடுங்கள். இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத். 6-33). கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுக் கடைப்பிடிப்பவர்கள் தன் தாய் தந்தையர்களிலும்விடப் பேறு பெற்றவர்கள் (லூக். 11-28) என்கிறார் இயேசு.

இன்னும், "நீங்கள் என்னைத் தேடுவது அருங்குறிகளைக் கண்டதாலல்ல; அப்பங்களை வயிறார உண்டதால்தான். அழிந்துபோகும் உணவுக்காக உழைக்கவேண்டாம். முடிவில்லா வாழ்வழிக்கும் நிலையான உணவுக்காக உழையுங்கள். அதை மனுமகன் உங்களுக்குக் கொடுப்பார்" (அரு. 6, 26-27), "நானே உயிர்தரும் அப்பம்"; (அரு. 6-35.) "என் ஊனைத் தின்று என் இரத்தத்தைக் குடிப்பவன் முடிவில்லா வாழ்வைக் கொண்டுள்ளான். நானும் அவனைக் கடைசி நாளில் உயிர்ப்பிப்பேன்" (அரு. 6-54).

அந்த அப்பத்தை வாக்களிக்கவே அன்று இயேசு இவ்வருங்குறி செய்தார். பெரியவியாழனன்று கடைசி இரா உணவின்போது அவ்வாக்கை நிறை செய்தார். இன்றும் திருப்பலிபூசையில் அதைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார். "அவர் பாடுபட மனமிசைந்து தம்மைக் கையளித்த போது, அப்பத்தை எடுத்து, நன்றி செலுத்தி, அதைப் பிட்டு, தம் சீடருக்கு அளித்துக் கூறியதாவது: இதை வாங்கி உண்ணுங்கள்; ஏனெனில், இது உங்களுக்காகக் கையளிக்கப்படும் என் சரீரம்" (ந. வ. 2). அன்று, இஸ்ராயேல் மக்களுக்கு இறைவன் தந்த "மன்னா". இறைவாக்கினர் எலியாசுக்குத் தூதன் தந்த உரொட்டி. மக்கள் கூட்டத்திற்கு இயேசுவின் ஐந்து அப்பங்கள். இன்று, நமக்கு ......?

அ. மருசலின்,
மறை ஆசிரியர்.

எதிர்பாருங்கள் :

இடம் : உரும்பராய், புனித மிக்கேல் ஆலய முன்றல்
நாள் : உயிர்த்த ஞாயிறு, 29-3-70.
நேரம் : பிற்பகல் 7-00 மணி.

திருமறைக் கலாமன்றத்தினர் அளிக்கும்

## "சாவை வென்ற சத்தியன்"

என்னும் இசை-உரை நாடகம்

கிறீஸ்து இறந்து—உயிர்த்து வானகம் சென்ற காட்சிகள்

விசேஷ பஸ்வண்டிப் போக்குவரத்துக்கள் ஒழுங்கு செய்யப்படும்.

## மாமர நிழலில் ...

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

விட்டார்களாம். மீண்டும் கிறிஸ்துவின் அடியார்களால் சிலுவைப்படையெழுச்சிகளின்பின்னர் கொண்டு வரப்பட்டபோது முனைவேருக உடைந்துவிட்டது. முனையை பாரிஸ் நகரிலும் ஈட்டியை ரோமையிலும் வைத்திருந்தார்கள். பிரான்சிய அரசியற்புரட்சியின் போது இந்த பரிசுத்த முனை காணுமல்போய்விட்டதாம்.

ஜெயா — ரோமாபுரியில் ஏதோபடிக்கட்டுகள் உண்டென்றும் தபசுகாலத்தில் யாத்திரிகர்கள் அந்தப்படிக்கட்டுகளை முழந்தாளால் நடந்து தாண்டிச் செல்லுவார்களென்றும் சிஸ்டர் சொன்ன. அதுபற்றி விளக்கமாகத் தெரியுமா?

மங்களம் ஆசிரியை—யேசுநாதரை சேவகர்கள் போஞ்சியுபிலாத்துவிடம் கொண்டு வந்தபோது அவர் பலபடிக்கட்டுகள் வழியாகச் செல்ல வேண்டியிருந்தது. விசாரணையின் பின்னுல் இதே படிக்கட்டுகள்வழியாக மீண்டும் இழுத்துவரப்பட்டார். இந்தச்சலவைக் கற்களாலான படிகளை பெயர்த்துக் கொண்டுவந்து ரோமாபுரியில் ஒரு தேவாலயத்தில் வைத்திருக்கிறார்கள். இந்தக் கற்கள் காலகதியில் அழிந்துவிடுமாதலால் அவற்றின்மீது மரப்பலகைகளைப் பொருத்தியிருக்கிறார்கள். இந்தப்புனிதமான படிக்கட்டுகளைத்தான் முழந்தாளால் தபசு காலத்தில் பக்தர்கள் தாண்டிச் செல்வர்.

அன்னுப்பாட்டி — நேரமாச்சடியம்மா. நான் போகவேணும். அவப்பொழுதிலும் தவப்பொழுதென்பார்கள். அதுபோல இன்றைக்கு உங்களோடு பேசியதில் பல நல்ல விஷயங்களை அறிந்தோம். மிச்சம் பெரிய உபகாரம்.

## பரிசுத்த வாரச்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

கல்வாரி மலையுச்சியில், மூன்று இருப்பாணிகளின் கொடூரவேதனையில், இரத்தம் சிந்திப் பலி ஒப்புக்கொடுக்கும் போதும், தமது பிதாவின் சிநேகத்துடன், மக்களின் சிநேகத்தையும் ஒன்றிக்க விரும்பி, "பிதாவே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள். இவர்களை மன்னியும்" என்று பரிந்துபேசி, இறைவனையும், பாவிகளானமக்களையும் ஒன்று சேர்க்கிறார். என்னே! நம் மீட்பர் மக்களிடம் காட்டிய அன்பின் வேட்கை. பிறர் குற்றத்தை மன்னிப்பதே பிறர் சிநேகத்தின் முதற்படி என்பதை அழுத்தம் திருத்தமாக விளக்குகிறார். அத்துடன் வலது பக்கக் கள்வனுக்குச் செவி சாய்த்து "இன்று தானே என்னுடன் பரகதியில் இருப்பாய்" என்று ஆறுதல் மொழிகூறி, தனது பாவத்தை உணர்வோருக்கு மன்னிப்பு நிச்சயம் என்பதை அறிய வைத்தார். "எல்லாம் நிறைவேறிற்று" என்று பிராயச்சித்தப்பலி ஒப்புக்கொடுத்த நமது சிலுவையின் ஆசிரியரான யேசுக்கிறிஸ்துநாதர் நமக்கு; தமது பாடுகளின் வழியாலும், மரணத்தின் மூலமும், உத்தானத்தின் உரிமையினுலும், ஒரு முக்கிய உண்மையைப்படிப்பிக்கிறார். அதாவது: கிறிஸ்துவின் பாடுகளில் நாம் பங்குபற்றினுல், அவரது இறப்பிலும் பங்குபற்றி, அவரின் உயிர்ப்பிலும் பங்கடைந்து, அவரது மகிமையையும் தரித்துக்கொள்வோம் என்பதே.

ஆகையால், கிறிஸ்தவர்களாகிய நாம் அவர் சிலுவை மரணம் மூலம் பெற்றுத் தந்த, நித்தியசீவியத்தின் ஐசுவரியங்கள் அனைத்தும் நம்மில்செயல்பட, இப்பரிசுத்தவாரத்தை உபயோகப்படுத்திக் கொள்வோம். நாம் எவ்வளவு நம்மை இறைவனிடம் கையளித்து, அவரது அருள் வாக்குகளை, செயல்களைக் கடைப்பிடித்து, அவரது அழைப்பு எங்களில் செயல்படவிடுகிறோமோ, அவ்வளவுக்கு அவரது பெலமானது, எமது பெலனுகவும், அவரது விருப்பு எமது விருப்பாகவும், எல்லாமே அவருடையதாகவும் மாற்றமடையும். விண்ணகின் தயாரிப்பு இம்மண்ணுலகிலேயே ஆரம்பித்து, பலனடைந்து வெற்றி தடையும் என்பது நிச்சயம்.

## ஒரு புதிய உடன்படிக்கையா ?

ஸ்பானியதேச மேற்றிராணிமார் மகாநாட்டை அண்மையில் மட்றிட் நகரத்தில் ஆரம்பித்து வைத்துத் தலைமை உரை நிகழ்த்திய மட்றிட்நகர அதிமேற்றிராணியார் மோர்சிலோ அடிகளார் வத்திக்கானுக்கும் ஸ்பெயின் தேசத்துக்குமிடையில் ஒரு புதிய உடன்படிக்கை விரைவில் ஒழுங்கு செய்யப்பட இருப்பதாகக்குறிப்பிட்டார். ஸ்பெயின் தேசம் ஜெனறல் பிறங்கோ தலைமையில் ஒரு கத்தோலிக்க தேசமாய் விளங்கி வந்தபொழுதிலும், ஒரு விசேஷ உடன்படிக்கை இரு நாடுகளுக்குமிடையில் இருந்துவந்தபொழுதிலும், அவ்வுடன்படிக்கையில் பலகுறைபாடுகள் காலகதியில் எழுந்துவிட்டன. இவற்றைச் சீர்படுத்த ஒரு புதிய உடன்படிக்கையைத் தயார் செய்வதில் அந்நாட்டில் பாப்பரசரின் ஸ்தானிகராகக் கடமையாற்றும் மகாவந். டடாக்கிளியோ அடிகளார் பல வருடங்களாக உழைத்து வந்திருக்கிறார். அவரது உழைப்பின் பயனை விரைவில் ஸ்பெயின் நாடு அடையும் குறிகள் தோன்றுகின்றன.

## வேந்தனைச் சுமந்த வேசரிக்குட்டி

— பெரிய கட்டைக்காட்டுப் புலவர் —

சக்கரியாசுதிர்க்க தரிசனம் செருசேல் தன்னைத்
தக்கதோர்பதியே என்னத் தன்திரு வாயாற்கூவி
மிக்கதோருனது வேந்தன் வேசரிமீது வாறுர்
எக்கணும்புகழ வென்றுல் எங்குலப் பெருமைக்கீடோ

மன்னனேரோதை யென்னும் வஞ்சகன் பகையால் கார்க்க
பொன்பதி யாளுந்தேவ புதல்வனே டன்னைதன்னை
இன்புறஎகிப்துக் கெங்கள் இனத்தவன் சுமந்துபோனுன்
என்னினிஎங்கள் மேன்மைக் இகபரத் தெவருமுண்டோ

புனிதவெண் ணுடைவீதி போற்றியே விரித்தயூதர்
தனிமுதற் றேவஎன்றும் தங்களின் ராசாவென்றும்
இனியஓ சன்னுபாட எங்கள்மா மரபோன்மீது
முனிவிலாச் செருசேல்யேசு முதன்மையாய் பவனிவந்தார்

பன்னிருபேரில் யூதாஸ் பணத்தின்மே லாசைவைத்து
அந்நியன் விற்றுன் நேச அரிய ராயப்பர்ஏசு
தன்னைநான் அறியேனென்றும் சத்தியம் செய்துபோனுர்
தன்னினைவிழுந்து மற்றோர் தனித்துவிட் டோடிப்போனுர்

கன்மனக்கொடிய யூதர் கத்தனைக் கொன்றுர் மீட்டும்
உன்னரும் மகிமையோடு உயிர்த்தெழப் பதைத்தார்யூதர்
அன்னநற்பெருமை எங்கள் வேசரிக்குலத் தார்க்கென்றும்
மன்னிய ஏசுதன்னை சுமந்ததால் ஒலித்ததம்மா

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

ரூதமதிரித்துவ சருவேசுரனின் கிருபையினுலும், புனித யூதாததேயுவின் மன்றாட்டினுலும், எனது நோயிலிருந்து சுகமடைந்து வருகிறேன். பூரண சுகத்தையும் எதிர்பார்க்கின்றேன். புனித யூதாததேயுவின் பக்தி எங்கும் பரம்புவதாக.

ஜி. லே.

"மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல, குறை காண்பவனும் ஆவான்; பிறர் குறையைக் காண்பவன் அரை மனிதன்; தன் குறையைக் காண்பவன் முழு மனிதன்."

— சொக்கிறற்றீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

### 1970 — பங்குனி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 22 | ஞாயிறு | குருத்தோலை ஞாயிறு | [ஊ] |
| 23 | திங்கள் | தினப் பூசை | [ஊ] |
| 24 | செவ்வாய் | ,, | [ஊ] |
| 25 | புதன் | ,, | [ஊ] |
| 26 | வியாழன் | பெரிய விழாழன் | [வெ] |
| 27 | வெள்ளி | பெரிய வெள்ளி | [ஊ] |
| 28 | சனி | பாஸ்கா திருவிழிப்பு | [வெ] |
| 29 | ஞாயிறு | உயிர்த்த ஞாயிறு | [வெ] |
| 30 | திங்கள் | தினப் பூசை | [வெ] |
| 31 | செவ்வாய் | ,, | [வெ] |

### சித்திரை — 1970

| | | | |
|---|---|---|---|
| 1 | புதன் | தினப் பூசை | [வெ] |
| 2 | வியாழன் | ,, | [வெ] |
| 3 | வெள்ளி | ,, | [வெ] |
| 4 | சனி | ,, | [வெ] |

## சத்தியவேத பாதுகாவலன்

## பரிசுத்த வாரம்

யூதருக்கு பாஸ்கா மிகப் பெரியதொரு பெருநாளாக இருந்தது. தம்மை எகிப்திய அடிமைத் தனத்தினின்றும், பார்வோனின் அதிகாரத்திலிருந்தும் தேவன் மீட்டமையையும், இரவுபகலாகத் தம்மை வழிநடத்தி, தம்மோடு உடன்படிக்கை செய்து, வாக்குப்பண்ணப்பட்ட பூமிக்குத் தம்மை அழைத்துச் சென்று, இறைவனது சொந்த மக்களாக கட்டியெழுப்பிய மகோன்னத பெருமையையும் நினைவுகூர்ந்தது மட்டுமல்லாமல், தாம் அனைவரும் ஒரே குடும்பமெனவும், தேவனின் மக்களெனவும் உணரத் தூண்டியது. சுகத்திலும் துக்கத்திலும், வாழ்விலும் தாழ்விலும் இறைவன் தம்மோடிருக்கின்றார், தாம் நன்றிகெட்டதனமாய் நடந்து கொண்டாலும் அவர் தம் அளவற்ற இரக்கத்தின் காரணமாய் தம்மை மன்னித்து திரும்பவும் ஏற்றுக்கொள்வார் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு அளித்தது.

யூதருக்கு பாஸ்கா எப்படி விளங்கியதோ, அவ்வாறே எமது பாஸ்காவும் விளங்குகின்றது. இறைவனது நன்மைத் தனங்களை, இரக்கத்தை, நம்மைத் தமது திருப்பாடுகளால் பாவத்தின் அடிமைத் தனத்திலிருந்து மீட்டு, தமது சொந்தச்சனங்கள், இறைமக்கள் ஆக்கிய அன்பை பரிசுத்த வாரம் எமக்கு நினைவூட்டுகிறது. அதுமட்டுமல்லாது நன்றிகெட்டதனமாக நடந்து பாவச்சேற்றில் விழுந்து கிடப்பவரையும் தட்டி எழுப்பி, நம்பிக்கை ஊட்டுகின்றது. மனிதர் பலவீனர்களாயிருந்த போதிலும் தேவனின் திருவருள் அவர்கள் மனதில் மனஸ்தாபத்தை எழுப்பக்கூடிய சக்திவாய்ந்தது. நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து, திவ்விய நற்கருணைபெற்று, இறைவனின் குடும்பத்தில் ஒருவராக மீண்டும் இடம்பெறும் நம்பிக்கை பிறக்கின்றது. பயபக்தியுடையவர்களாயிருந்தாலும், வெது வெதுப்பானவர்களாயிருந்தாலும், பாவத்தில் தோய்ந்தவர்களாயிருந்தாலும் நல்லபாவசங்கீர்த்தனத்தால் தம் வாழ்வைப் புதுப்பிப்பதற்கு பரிசுத்த வாரமே சிறந்த தருணமாகும்.

### இலங்கை வானொலி கூட்டுத்தாபன தேசிய சேவை
### கத்தோலிக்க பாஸ்கு நிகழ்ச்சி

பங்குனிமாதம் 27-ந்தேதி பெரிய வெள்ளிக்கிழமை

காலை 9-30 மணிமுதல் 10-30 மணிவரை விசேஷ நிகழ்ச்சி. நடாத்துபவர்: வண. பிதா எம்மானுவேல் யேசுதாசன், ஓ. எம். ஐ.

பங்குனிமாதம் 29-ந் தேதி உயிர்த்த ஞாயிறு.

காலை 9-30இல் இருந்து 10வரை விசேஷ பாஸ்கு நிகழ்ச்சி. நடாத்துபவர்: வண. பிதா கே. சுவாமிநாதன்.

மாலை 7-45இல் இருந்து 8-00வரை பாஸ்கு நற்செய்தி. வழங்குபவர்: வண. பிதா எம்மானுவேல் பர்னுந்து, ஓ. எம். ஐ.

சித்திரைமாதம் 4, 5, 6ஆம் தேதிகளில் கத்தோலிக்க நற்சிந்தனை: காலை 6-30-ல் இருந்து 6-35வரை. வழங்குபவர்: சங். சகோதரர் தோமஸ் பர்னுந்து, ஓ. எம். ஐ.

# சிலுவையுடன் சிலமணிநேரம்

( ஆபிரகாம் இராஜேஸ்வரி — தும்பளை )

அதோ திருச்சிலுவை! நாம் அதை நன்றாக உற்று நோக்குவோம். எத்தனையோபேர் மீது பரிவு காட்டி, பாசமூட்டித் தமது வழிகளைக் காட்டிப் பரிசுத்தராக வாழக் கற்றுக் கொடுத்து அவர்களைப் பிதாவுக்கு மிகவும் உகந்தவர்களாக்கிச் சத்திய திருச்சபையையே இப்பூவுலகில் நிலைநாட்டிய அன்பர் திருவதனம் வாடி, வதங்கி, களைத்து, வெயர்த்து இருள் படர்ந்து பரிதாபத்துக்குரிய விதமாகக் காட்சி அளிக்கின்றதே! திருச்சிரசில் முட்களாலான முடி வேறு உறுத்துகின்றதே! ஆ...! அதிலிருந்து பெருகி வழிந்தோடும் இரத்தத்திற்கோ எல்லையில்லை. கருணை மிகுந்த தம் பார்வையால் கடின இருதயத்தையும் இளகச் செய்யும் நாதருடைய கண்கள் ஏக்கப் பெருமூச்சோடு பரலோகத்தைநோக்குகின்றனவே! எத்தனையோ பேருக்கு அபயம் கொடுத்து, ஆசீர்வாதம் அளித்த திருக்கரங்கள் ஆயிரமாயிரம் அற்புதங்களைச் செய்த கரங்கள்— சிறுவர்களை நம்மிடையே வரவிடுங்கள் என்று அவர்களை அரவணைத்த திருக்கைகள் நீண்ட இருப்பாணிகளால் துளையுண்டு இன்று சக்தியற்று முழுவதும் குருதி மயமாக இருக்கின்றதே! விலா என்புகள் எல்லாம் புடைத்தெழுவது போல் தாங்க முடியாத வேதனையால் பொருமுகின்றதே! ஐயோ என்ன காட்சி இது! அன்றலர்ந்த ரோஜா மலரின் ஒளிபோல் திகழ வேண்டிய வதனத்தில் இன்று சோக இருளா? ராஜமணி முடி தாங்க வேண்டிய சிரசில் இன்று முட்களின் முடியா? பிணியாளரைத் தொட்டவுடன் பிணி தீர்க்கும் கரங்களில் இன்று நீண்ட இருப்பாணிகளா? ஐயோ பார்க்கச் சகிக்கவில்லையே! என்ன பரிதாபமான காட்சி!

சகல லோக அண்ட சராசரங்களையும் படைத்த தேவன் தமது உருவ சாயலாகவே படைக்கப்பட்ட ஈன மானிடரால் புவிதனில் ஏன், இப்படிக் கொடூர மரணம் அடையவேண்டும்? இக் கேள்விக்குப் பதில் மனிதனின் பாவம். மானிடராகப் பிறந்த ஒவ்வொருவரும் செய்த பாவத்தின் குரூரம் தான் அந்தச் சிலுவை. வாழ்வற்றோருக்கு வாழ்வளிக்கும் வள்ளலுக்கா அந்தச் சிலுவை. தாழ்வினைக் காட்டிய தயாபரனுக்கா அந்தச் சிலுவை? மூக்காலத்தையும் உய்த்துணரக்கூடிய இறைமகனுக்கு மனிதன் அளித்த சன்மானம் இதுவா? என்ன கொடுமை! என்ன அநியாயம்! இந்தச் சிலுவை மட்டில் இந்தப் பரிசுத்தவாரத்தில் நாம் சிந்தித்ததுதான் என்ன? செய்துகொண்ட பிரதிக்கினைதான் என்ன?

நமது மனச்சாட்சியில் கேட்கப்படும் கடவுளுடைய குரலுக்கு முதலில் செவிகொடுப்போம். சிலுவை நம்மை அழைக்கிறது. அன்போடு அரவணைப்போம். வீண் களியாட்டங்களிலும், குடிவெறியிலும், போசனப்பிரியத்திலும் நீந்தி விளையாடிப் பாவச் சேற்றில் புரண்டது போதும். விழித்தெழுவோம். "என்னோடுகூட ஒருமணி நேரமாவது விழித்திருக்க உங்களால் முடியாமல் போனதோ?" என்று நாதர் தமது சீடர்களுக்கு முறைப்பட்டுக் கொண்டதை நெஞ்சகத்தே நினைப்பூட்டுவோம். உலகம், சரீரம், பசாசு எனும் சத்துராதிகளை வெல்வதற்கு விழித்திருந்து செபம் செய்வோம். இப்பொழுதும் ஆலயந்தோறும் திவ்விய நற்கருணையில் இரவுபகலாய் வீற்றிருக்கும் நமது ஆண்டவருக்கு ஆறுதல் உண்டாக்குவோம். கோவிலிலே அவமரியாதை, அநாசாரம், வேடிக்கை இவைகளை இனிமேல் விட்டுவிடுவோம். நமது பாவங்கட்காகத் தம்மையே பரமபிதாவுக்குப்பலியாக்கினவரைச் சிலுவையின் பதினான்கு ஸ்தலங்களையும் பயபக்தியோடு தியானிப்பதன் மூலம் ஆறுதல் உண்டாக்குவோம். சிலுவைப் பலியால் நைந்த அவருடைய திருஇருதயத்தை நமது பாவங்களால் மீண்டும் மீண்டும் துளைத்து வேதனை உண்டாக்காது பாவம் எனும் பசாசை விரட்டியடிப்போம். இந்தப் பரிசுத்த வாரத்தில் அனுதினமும் சிலுவையுடன் சிலமணி நேரத்தைச் செலவிடுவோம். அந்தப் பெரிய பாடுகளை நினைந்து நாள்தோறும் அவரவர் அந்தஸ்துக்கேற்ப ஏற்படும் துன்பங்களையும் துயரங்களையும் மனவேதனைகளையும், உடல் வேதனைகளையும் நம் இறைமகனுக்காக அன்போடு ஏற்றுக் கொள்வோம். "சிலுவையாகிய துன்பங்களை உம்மோடே கூட நாங்கள் சுமக்கக் கிருபை செய்தருளும்" என வேண்டிக்கொள்வோம்.

## சிலுவையிலே மகிமை பாராட்டுவோமாக!

"நாங்களோ எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் சிலுவையிலே மகிமை பாராட்டவேண்டும். ஏனெனில், அவரிலேயே எங்களுக்கு இரட்சணியமும், சீவியமும், உத்தானமும் உண்டு. அவராலேயே நாங்கள் இரட்சிக்கப்பட்டு விடுதலையடைந்தோம்."




இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்திற் 1970 ஆம் ஆ பங்குனிமீ 25ஆம் உ புதன்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கத்தோலிக் பிரஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300 தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org